# புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஜூன் ௴ 28௳ [ந. 50.

பிரஸங்கம் L.

## அமெரிக்காவை அச்சு நாடுகள் வளைத்துக் கொள்ள முயற்சிப்பது.

[ஏப்ரல் ௴ 24௳ அமெரிக்கா தேசத்து சமாசாரப் பத்திரிகைகள் வெளியிடுவோரின் சங்கத்தில் ஐக்கிய நாடுகளின் கப்பற்படை காரியதரிசி கர்னல் நாக்ஸ் செய்த பிரசங்கம். இந்தப் பிரசங்கம் நாடெங்கும் ஒலிபரப்பப்பட்டது].

உங்கள் தொழிலில் ஆயுள் நபராக இருக்கும் நான் உங்கள் முன்னால் பேச வந்திருப்பதில் எனக்கு ஒரு பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. இத்துடன் தற்காலம் எனக்கு ஒரு உத்தியோகப் பொறுப்பும் ஏற்பட்டிருக்கிறது. யுத்தத்தால் நாசம் செய்யப்படும் இவ்வுலகத்தின் பாதுகாப்புப்படையின் முன்னணியை சீக்கிரமாய் அபிவிருத்தி செய்து சரியான நிலைமையில் வைத்துக்கொள்ள வேண்டியதுதான் என் உத்தியோகப் பொறுப்பு என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டால் எனக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பு அதிகமாகிறது. யுத்த மேகங்களோ நம் நாட்டின் அடிவானத்திலும் குமுறுகின்றன.

தொழில்முறையில் என் நண்பர்களான நீங்கள் என்னிடமிருந்து ஒளிவு மறைவு இல்லாத அப்பட்டமான பிரசங்கத்தை எதிர்பார்க்க உங்களுக்கு பாத்தியம் உண்டு. கப்பற்படையின் காரியதரிசி என்ற ஹோதாவில், இதுவரை உலகத்திலேயே எவரும் பார்த்திராத ஒரு மகத்தான கப்பற்படையை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கும் என்னிடத்தில், நீங்கள் களங்கமற்ற உண்மையை எதிர்பார்க்கலாம். நான் ஒரு சமாசாரப் பத்திரிகைக்காரனாகவும், ஒரு உத்தியோகஸ்தனாகவுமிருப்பதால் கப்பற்படைக்கும் சமாசாரப் பத்திரிகைகளுக்கும் ஒரு

புரையற்ற நேசப்பான்மையை உண்டுபண்ணுவதிலும் அப்பேற்பட்ட நேசப்பான்மையை நிலை நிறுத்துவதிலும் எனக்கு அக்கரையுண்டு. வேறு தொழில் செய்யாத சமாசாரப்பத்திரிகைக்காரன் என்பதாலும், தன் தொழிலில் கௌரவம் பாராட்டுபவன் என்பதாலும் நான் எப்பொழுதும், அதிலும் முக்கியமாய் சமாதான காலங்களில், கட்டாயமான ஸென்ஸாரைப் பூரணமாய் ஆக்ஷேபிக்கிறேன். யுத்த காலங்களில் நிச்சயமாய் வெளியிட முடியாத சிற்சில ராணுவ சமாசாரங்கள் இருக்கத்தான் இருக்கும். ராஜவிசுவாசமும் தேசபக்தியுமுடைய எந்தப் பத்திரிகைக்காரனும் என்நிலைமையிலும் அப்பேற்பட்ட சமாசாரத்தை வெளியிடமாட்டான். யுத்தகாலத்தில்கூட, இந்த ஒரு கட்டுப்பாட்டுக்குட்பட்டு, ஒருவித ஸென்ஸாரும் இருக்கக்கூடாதென்பதுதான் என் அபிப்பிராயம். நாம் விரும்பும் பலனை யுத்த இலாகாவும் கப்பற்படை இலாகாவும் சமாசாரப் பத்திரிகைகளும் தங்களுக்குள் ஒத்துழைப்பதால் அடைந்து விடலாமென்பது எனது நம்பிக்கை. இந்த மாதிரியான ஒரு அந்யோந்ய பாவத்தை ஏற்படுத்தத்தான் நான் முயன்றுவருகிறேன். நான் கப்பற்படையின் காரியதரிசியாய் வேலைபார்த்து வரும்வரையில் அதே மாதிரி முயற்சிகள் செய்துவருவேன். ஜனநாயக ஆட்சியில், தேசத்துக்கு பெரும் சங்கடம் நேரும் காலத்தில் இவ்விதமான ஒத்துமை அத்தியாவசியம். கட்டாய முறைகளைக் கையாண்டால் முதலாளிகள் தொழிலாளிகள் சம்பந்தங்களிலோ, அல்லது பொது விஷயங்களிலோ ஒற்றுமை ஏற்படுத்த முடியாது. ஒருவரை ஒருவர் நன்ருய் தெரிந்து கொள்வதாலும் பரஸ்பரம் ஒத்துழைப்பதாலும்தான் ஒத்துமை ஏற்படும்.

நாட்டின் பாதுகாப்பின் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கும் சமாசாரங்களை வெளியிடக்கூடிய அநேக விதமான சாதனங்களுக்கும் இருக்கவேண்டிய நேசப்பான்மை மிகவும் முக்கியமான விஷயம்தான். இருந்தாலும் இன்றிரவு அதைவிட முக்கியமான விஷயத்தில் உங்கள் மனதைச் செலுத்தும்படி செய்யப்போகிறேன். என்னுடன் இந்த உலகத்தின் தற்கால ஸ்திதியை கவனிக்கும்படி உங்களையும் கேழ்க்கப்போகிறேன். நாம் உலக ஸ்திதியை கவனிப்பது பிரயோஜனப்படவேண்டுமேயானுல் அது முற்றிலும் உண்மையாகவும் வெளிப்படையாகவும் இருக்கவேண்டும். அழிவையடையும்படி மனம் ஒடிந்து உட்காருவதற்கோ, அல்லது முன்பின் யோசிக்காமல் குருட்டுத்தனமான தைரியம் அடைவதற்கோ அது காரணமாய் இருக்கக்கூடாது. நாம் அபிமானம் வைக்கும் எல்லாப்பொருள்களுக்கும் பெரிய ஆபத்து வரும்போலிருந்தால் நமக்கு எப்பொழுதும் நல்லதுதான் வரும் என்று நினைத்துக்கொண்டிருப்பதற்கோ அல்லது பயந்தாங்கொள்ளித்தனமாய் நாம் தொலைந்து விட்டோம் என்று நினைத்துக்கொண்டு சும்மா இருப்பதற்கோ முடியாது.

கப்பற்படையின் காரியதரிசி என்ற ஹோதாவில் உலகின் எல்லா பாகங்களில் இருந்தும் மற்றவர்களுக்கெல்லாம் கிடைக்காத அநேக அந்தரங்கமான சமாசாரங்கள் எனக்குக் கிட்டுகின்றன. ஆனுல் இந்த அதிகமானதும் அந்தரங்கமானதுமான சமாசாரங்களால் உலகத்தின் தற்கால ஸ்திதி உங்களுடையவும் என்னுடையவும் பத்திரிகைகளில் சொல்லியிருப்பதைக்காட்டிலும் ஒன்றும் மாறிவிடவில்லை

இப்பொழுது நாம் காண்பதென்ன? நம்முடன் ஒரு பொழுதும் ஒத்துவராத நம் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறான கொள்கைகள், ஸ்தாபனங்கள், முறைகள் இவைகளையுடைய ராணுவ வல்லரசுகள் அமெரிக்காவை கொஞ்சம் கொஞ்சமாய் சூழ்ந்துகொண்டு வருகின்றன. இந்த வல்லரசுகள் நம்முடைய விரோதிகள் என்று அடிக்கடி பகிரங்கமாய் சொல்லிக்கொண்டிருக்கின்றன; இந்தச் சத்துருக்கள் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்; இந்த ஒப்பந்தமும் நம்மை உத்தேசித்து நமக்கு விரோதமாய்த்தான் என்பதையும் வெளியிட்டுச்சொல்ல அவர்கள் கொஞ்சமும் தயங்கவில்லை.

நமக்கு விரோதமாய் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின் பயனாய் நம்மள் பேரில் ஏன் இன்னும் யுத்தம் துடங்கவில்லை என்றால் நம்முடன் இப்பொழுது யுத்தம் செய்வது அந்த வல்லரசுகளின் இப்போதைய காரியத்துக்குப் பொருந்தவில்லை. அச்சு நாடுகளின் அபிப்பிராயத்தில் நம்முடன் யுத்தம் ஆரம்பிப்பது சரி என்று எப்பொழுது தோன்றுகிறதோ அப்பொழுது யுத்தமும் ஆரம்பிக்கப்படும்; நாமும் கதியற்று அவர்கள் காலில் விழுந்து சரணாகதி செய்வதைவிட வேறு ஒன்றும் செய்து இதை மாற்றுவதற்கில்லை.

அநேக மாதங்களாக ஐக்கிய நாடுகளுக்கு பிரிட்டனைத் தவிர மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் சம்பந்தம் முற்றிலும் நின்றுவிட்டது. இந்தக் கப்பல்கள் போவதற்கு ஏற்பட்ட ஒரே வழி முழுவதும் பெரிய நீர்மூழ்கிப்படை ஏவிவிடப்பட்டிருக்கிறது. அந்தப்படையில் எவ்வளவு நீர்மூழ்கிக்கப்பல்கள் இருக்கின்றனவென்று ஒருவருக்கும் தெரியவில்லை. அந்த நீர்மூழ்கிக்கப்பல்களோ, சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாய், சென்ற யுத்தத்திலிருந்ததைக் காட்டிலும் ரொம்பவும் பயனுள்ளவையாயிருக்கின்றன. இந்த நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு சமுத்திரத்தில் அமுங்கிச் செல்லும் சக்தி அபாரமாய் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளின் செய்கைக்குட்பட்ட பிரதேசமோ அட்லாண்டிக்கில் ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் பிரித்துக் கொடுக்கும் எல்கையிலிருந்து வெகுதூரம் மேற்கேயே வந்துவிட்டது.

பிரெஞ்சுக் கடற்கரையிலுள்ள சாதகமான தளங்களைக் கைப்பற்றியதில் அவர்களுக்கு கடல் பரப்பில் செல்லக்கூடிய ஒரு பெரிய "ரெய்டர்" படை சேர்ந்துவிட்டது. அந்த ரெய்டர்களுக்கோ அசாத்திய வேகம்; சிலவைகளுக்கு பீரங்கி சக்தி அதிகம், அதனால் அவைகள் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் மத்தியில் உள்ள வியாபாரச் சாதனங்களை த்வம்சம் செய்கின்றன. கடைசியாக, முற்றுகையிடப்பட்ட இங்கிலாந்துக்குச் செல்லும் கடல் பாதைகளில் உள்ள ஆபத்துக்களை அதிகப்படுத்துவதற்காக வடக்கு நார்வேயிலும், மேற்கு பிரான்ஸிலும் உள்ள தளங்களிலிருந்து முரட்டு பாம்பர்க்கூட்டங்கள் பறந்து வந்து வட்டாரமிடுகின்றன. கொஞ்சம் கொஞ்சமாய் இழக்கப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை பர்த்திசெய்ய முடியாதபடி, அவ்வளவு வேகமாய் ஏறிக்கொண்டு வருகிறது. சமாதான காலத்தில் நம்முடைய கப்பல் வியாபாரத்துக்கு ரஸ்தாவாயிருந்த, மத்தியதரைக்கடல் சத்துருவால் ஜயிக்கப்பட்ட ஐரோப்பாவுக்குத் தெற்கே இருக்கிறது. இன்றோ அந்த மத்தியதரைக் கடல் செல்லத்தகாத

பாதையாகிவிட்டது. அந்த மத்தியதரைக்கடலின் பேரில் போர் புரியும் சைனியங்களுக்கு ஸப்ளைகள் எடுத்துச்செல்லும் கப்பல்களும், மேற்படி கடலின் ஆதிக்கத்துக்காக சண்டையிடும் இதாலிய, பிரிடிஷ் யுத்தக் கப்பல்களுமே சஞ்சரிக்கின்றன, அந்தக் கடலோரத்திலுள்ள நாடுகளுடன் நாம் செய்த கண்டிராக்ட்டுகளெல்லாம் துலைந்து விட்டன. இரண்டு சைனியங்களும் மும்மரமாய் சண்டையிடும் பெரிய ஆபிரிக்கா கண்டத்திலோ நம்முடைய வியாபாரக் கப்பல்களுக்கு ஒரு துறைமுகமும் கிடைக்கவில்லை. தெற்கு அட்லாண்டிக்கில் பாதிக்கு மேல் பிரவேசித்திருக்கிறதும், மேற்கு உலகத்தின் தென்பாதிக்கு விரோதமாய் யுத்த நடவடிக்கைகள் நடத்துவதற்கு தகுந்த தளமாகக் கூடியதுமான அதன் மேற்குக்கரைக்கு நம்முடைய வியாபாரக் கப்பல்கள் செல்ல முடியவில்லை. நன்னம்பிக்கை முனையைச்சுற்றி நாம் கிழக்கே போக யத்தனித்தாலும் சரி, மெகல்லான் ஜலசந்தி வழியாய் மேற்கே போக யத்தனித்தாலும் சரி சத்துருக்களின் ரெயிடர்கள் நிறைந்த கடலையே காண்கிறோம். எப்படியோ சுற்றியடித்து மேற்கேயோ, கிழக்கேயோ நம்முடைய பயணத்தின் இறுதியை வந்து அடைந்தோமானால், இறக்கமற்ற ராணுவ ஆக்கிரமிப்பு என்ற தங்கள் கொள்கைகளில் நாம் தலையிடாமல் இருக்கும்படி நம்மை தடைசெய்ய வேண்டியதற்காகவே ஒப்பந்தம் செய்துகொண்டு இருப்பதாய் பகிரங்கமாய் பறைசாற்றுகிற அச்சு நாட்டின் ஒரு கூட்டாளியைச் சந்திக்கிறோம்.

அச்சு வல்லரசுகளால் அமெரிக்காவை வளைத்துக் கொள்வதற்காகத் தயார் செய்யப்பட்டிருக்கும் விலங்கில் சமீபத்தில் ஒரு கரண் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது தான் சமீபத்தில் வெளியிடப்பட்ட ருஷ்ய—ஜப்பானிய ஒப்பந்தம். ருஷ்யாவுக்கு ஜப்பானிடமிருந்து எதிர்ப்பு பயம் கிடையாது. தெற்குச் சீனாவை ஆயுத பலத்தால் நசுக்குவதற்காக அது செய்து வரும் பிரயத்தனங்களே ஜப்பானுக்கு கைகொள்ளாவேலையாக இருந்துவருகிறது; மேலும் ஜப்பானின் ஆசைகள் வடக்கே நாடவில்லை; தெற்கே தான் நாடுகின்றன. தான் தெற்கே தன் வேலைகளைத் தீவிரமாக கவனித்துக்கொண்டிருக்கும்பொழுது வடக்கே தனக்கு எதிர்ப்பு ஏற்படாமலிருக்கவேண்டுமென்பது ஜப்பானுக்கு அத்யாவசியமாகிவிட்டது. தன்னுடைய மஞ்சூகோ எல்லையில் ஏற்படும் சாவதானத்தைப் பற்றி ஜப்பானுக்கு எவ்வளவு உறுதி ஏற்பட்டிருக்கிறதென்று எனக்குத் தெரியாது; அந்த உறுதி எப்படி இருந்தபோதிலும், அந்த ஒப்பந்தத்தின் பயனாய் பிரிடனுக்கும் நமக்கும் யுத்த தளவாடங்கள் சம்பந்தமாய் முக்கிய ஸ்தானமாய் இருக்கும் பிரதேசங்களில் ஜப்பானின் விரோதம் வியாபிக்கலாம் என்பதற்கு ஹேஷ்யங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த ஒப்பந்தம் முடிவடைந்ததால் ஜப்பானின் யுத்தக் கட்சியின் கை வலுக்குமென்பது நிச்சயம்.

ஹிட்லர் ருஷ்யாவை எதிர்த்தால் ஹிட்லருக்கு தான் உதவி செய்வதில்லை என்று ஜப்பான் செய்த வாக்குறுதியானது பிரயோஜன மற்ற வீண் வார்த்தை. ஐரோப்பாவில் தான் ருஷ்யாவுக்கு உதவி செய்ய முடியாது; இது போன்ற காரியத்துக்கு ஹிட்லருக்கு ஜப்பானின் உதவியும் தேவையில்லை. ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்த பேரத்தின் முடிவு இது தான்:—(1) நம்மைச் சுற்றி

இருக்கும் விலங்கு இருக்கிறது. (2) இந்தப் போரத்துக்கு முன் ருஷ்யா எவ்வளவு தூரம் ஹிட்லரின் எதிர்ப்புக்கு விஷயமாகக் கூடியதாயிருந்ததோ, அதேபோல் இப்பொழுதும் ஹிட்லரால் எதிர்க்கக்கூடியதாய்த்தானிருக்கிறது. (3) தூரக் கிழக்குப் பிரதேசத்தில் ஜப்பானுக்கு ருஷ்யாவிடமிருந்து எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் செய்துவிட்டது. யுத்தப் பரிபாஷையில் சொன்னால், இந்த ருஷ்ய-ஜப்பானிய ஒப்பந்தமானது கிழக்கு ஆசியாவில் தன்னுடைய ஆதிக்கத்தைப் பரவச்செய்வதில் ஈடுபட்டிருக்கும் ஜப்பானுக்கு சாவதானமளித்து, யூக்ரேனைப் பிடிப்பதற்காக ருஷ்யாமேல் நாஸிகள் பாய்ந்தால் ருஷ்யாவை முன்னிருந்த நிலையிலேயே விட்டுவிட்டது.

இவ்விதமாய், நம்மைச் சுற்றி உள்ள உலகின் ஸ்திதியை நாம் கவனித்துப் பார்த்தால், லிபியா வழியாகவும் எகிப்து- ஸூயஸ் வழியாகவும், யூகோஸ்லாவியா வழியாகவும் கடல் மூலமாகவும், ஆபிரிக்காவின் மேலக்கரையிலிருந்து தென் அமெரிக்காவரையிலும், பஸிபிக் மஹா சமுத்திர மூலமாய் டச்சு இந்தியத் தீவுகள் வரையிலும், எல்லாவற்றிற்கும் மேலாக, விசாலமான வட அட்லாண்டிக் மூலம் பிரான்ஸிலும் நார்வேயிலுமுள்ள ஜெர்மானிய தளங்களிலிருந்து க்ரீன்லண்ட் வரையிலும், நம்மள் கஷ்டம் அதிகரித்துவருகிறது. ஜெர்மன் யுத்த தந்திரம்—ஜாக்கிரதையாய் ஆலோசிக்கப்பட்டு திறமையுடன் நிறைவேற்றப்பட்ட உலக யுத்த தந்திரம்—நாளுக்கு நாள் வியக்தமாகிக்கொண்டுவருகிறது. உலகத்தில் எங்கும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதுதான் ஜெர்மானியர்களின் பேரவா என்பது தெரியாமலிருக்க முடியாது.

நாஸிப்பொறியின் பற்கள் நெருங்குகின்றன. நம்மைத் துண்டுபடுத்தி கடைசியாக தோற்கடிக்கவேண்டுமென்ற தங்கள் சூழ்ச்சியை அச்சு வல்லரசுகள் நிறைவேற்றிக்கொண்டிருக்கையில் எவ்வளவு காலம்தான் நாம் ஒன்றும் புரியாமல் மயங்கி கையைக்கட்டிக்கொண்டிருப்பது? ஜெர்மனி இதற்குமுன் தனக்கு பலியான நாடுகளுக்கு செய்துவந்ததற்கும், இப்பொழுது அவர்கள் நமக்குச் செய்வதற்கும் என்ன வித்தியாசம்? முதலில் நமக்கு விரோதமாய் எவ்வித திட்டமுமில்லை என்று பாசாங்குசெய்து மிருதுவாக உறுதிகூறுவது. போலந்து அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொண்டபோது இதேதான் போலந்துக்குச் சொன்னார்கள். பிறகு பிரான்ஸில் அவர்கள் செய்ததுபோல் நம்முடைய பலக் குறைவுகளையும், உள்நாட்டுக் கலகங்களையும், நமக்கு பிரதிகூலமான ஸ்தானங்களையும் கண்டறிந்து வெளிப்படுத்தக்கூடிய சாமர்த்தியமுள்ள பரிபூர்ணமான வேவு கோஷ்டியை அமைப்பது. பிறகு நார்வேயில் செய்ததுபோல் ஐந்தாவது படையை ஏற்படுத்துவது? இந்த ஐந்தாம்படை இன்னும் அதிகமாய் அனுப்பப் படவில்லை. ஆனாலும் அவர்கள் இருக்கிறார்கள் என்பது நமக்கு புலனாவதற்குப் போதுமான அளவு அவர்கள் வேலைசெய்து வருகிறார்கள். அதற்குப் பிறகு இப்பொழுது அவர்கள் யூகோஸ்லாவியாவில் செய்தமாதிரியே கொஞ்சம் கொஞ்சமாய் வளைத்துக்கொண்டு தாங்களிருந்து யுத்தம் செய்வதற்கு தங்களுக்கு அனுகூலமாயுள்ள ஸ்தானங்களைக் கைப்பற்றிக்கொள்வது. ஏன்? நம்முடைய மனப் பான்மையிலும் நாம் அச்சு நாடுகளுக்கு பலியான நாடுகளையே அனுசரிக்கிறோம்.

உலகத்தின்மற்ற எல்லாபாகமும் தவிக்கும் காலத்தில் நாம்மட்டில் தப்பிவிடலா மென்று நினைக்கிறோம். ஒன்றுபட்ட தேசபக்தியில் நமது எண்ணங்கள் ஈடு பட்டிருக்கவேண்டியதிருக்க நாம் கேவலமான வகுப்புவாதங்களை தலைவிரித்தாட விடுகிறோம். அச்சு வல்லரசுகள் நம்மை எதிர்க்க உத்தேசித்திருக்கிறார்களென்றோ அல்லது அவர்கள் எதிர்த்தால் அவர்கள் ஜயமடைவார்கள் என்பதையோ நாம் நம்புகிறோமில்லை. தென் அமெரிக்காவை எதிரிகளின் படையெடுப்பிலிருந்து காப்பாற்றவேண்டியது நமது நாட்டுப் பாதுகாப்பின் முதலாவதான வேலையா யிருந்தும் தென் அமெரிக்காவில் தற்காலமிருக்கும் உண்மை ஸ்திதியை நாம் கவனிக்கிறோமில்லை.

நம்மை எதிர்ப்பதற்கு ஒரு தகுந்த தளமாய் ஆகிவிடக்கூடியதாய் நமக்குத் தெற்கேயுள்ள அந்தப் பெரிய நாட்டிலே எதிரியின்படையெடுப்பை எதிர்ப்பதற்கு ராணுவ பலமோ கப்பற்படை பலமோ கிடையாது. நம்முடைய முட்டாள்தன மான அலக்ஷிய புத்தியால் இப்பொழுதிருக்கும் பொருளாதார நிலையில் சுயநலப் போராட்டங்கள் ஐரோப்பாவிலிருந்து கிளம்புகின்றனவேயன்றி வட அமெரிக்காவி லிருந்தல்ல என்பதை நாம் கவனிக்கிறோமில்லை. அப்பிராந்தியத்தில் அநேக தேசங்களில் நம்மைத் தலைகுப்புறக் கவிழ்த்துவிடும் நாஸிகளுக்கு அனுகூலமா யுள்ள அம்சங்களின் முக்கியத்தையும், தன்மையையும் நாம் எவ்வளவு கவனிக்க வேண்டுமோ அவ்வளவு நாம் கவனிக்கவில்லை. நம்மை அடியோடு அழித்துவிடக் கூடிய இந்த அம்சங்கள் அச்சுநாடுகளுக்கு அனுகுணமாயிருக்கும்படியான கலகக் களேபரங்களை சீக்கிரத்தில் உண்டுபண்ணிவிடும். நம்முடைய எல்லைக்குள் அச்சு வல்லரசுகள் காலடி வைத்துவிட்டார்களேயானால் அதனால் நம்முடைய சாவதானத்துக்கு எவ்வளவுதூரம் பங்கம் ஏற்படக்கூடுமென்பதையும் நம்மில் பெரும்பாலோர் கவனிக்கவில்லை. அமெரிக்க ஆக்ஷியின்கீழ் முக்கியமான போக்குவரத்து வழியான பனாமாக் கால்வாயின் சாவதானம் எவ்வளவு பாதிக்கப் படுமென்று நாம் எண்ணவில்லை. ஏற்கனவே பிரான்ஸை ஜயித்த ஜெர்மானி யர்கள் பிரெஞ்சுக் காலனியைச்சேர்ந்த டாகாரில் ஊன்றிக்கொண்டுவிட்டால் அமெரிக்காவுக்கு எவ்வளவு மகத்தான ஆபத்து ஏற்படுமென்பதை நம்மளில் சிலரே அறிவார்; அதிலும் சிலரே அதை ஒப்புக்கொள்வார்கள். அங்கிருந்து கொண்டு ஜயம்பெறும் ஜெர்மானியர்கள் தங்களுடைய கப்பல்களாலும், நீர்மூழ்கி களாலும், வெகுதூரம் சுடக்கூடிய பாம்பர்களாலும், நம்மை தென் அமெரிக்காவி லிருந்து போக்குவரத்து சாதனங்களில்லாமல் பிரித்து, மன்ரோத் தீர்மானத்தை ஒரு குப்பைக் கடிதமாகச் செய்துவிடுவார்கள்.

கடைசியாக நம்மைச் சூழ்ந்து கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் விலங்கின் கடைசிக் கரணும் சேர்க்கப்பட்டு, அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் நடக்கும் யுத்தமும் இழக்கப்பட்டு, இங்கிலாந்தின் கப்பற்படையும் மூழ்கடிக்கப் பட்டோ பிடிக்கப்பட்டோ இங்கிலாந்தும் தோற்கடிக்கப்பட்டால் நமக்கு எவ்விதமான பலன் கிடைக்குமென்பதை நம்மளில் அநேகர் குருட்டுத்தனமாய் கவனிக்கிறார்களில்லை.

நம்மை வளைத்துக்கொள்வதற்காக செய்யப்படும் எந்த சூழ்ச்சிக்கு நாம் பலியாகிக்கொண்டிருக்கிறோமோ அந்த சூழ்ச்சியின் உண்மையான ஸ்வரூபம் இது தான். ஆனால் இங்கு சொல்லப்பட்டது ஒரு அரைவாசி தான். நமக்கு ஏற்பட்டு இருக்கும் நாள்தோறும் விருத்தியாகிக்கொண்டிருக்கும், இந்தப் பெரிய ஆபத்தை—சத்துருக்களால் நாம் சூழப்படுவதை—போக்கடிப்பதற்காக நாம் எவ்விதமான காபந்துகள் செய்யவேண்டுமென்று நாம தீர்மானிப்பதற்கு முன்பாக இதை நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும்:—சத்துருக்கள் நம்மை நன்றாய் சூழ்ந்து கொண்டு தனிப்படுத்திவிட்டார்களென்றும், இங்கிலாந்து விழுந்துவிட்டதென்றும் இவ்வாறெல்லாம் நடந்துவிட்டதென்று நினைத்துக்கொள்ளுங்கள்—அப்பொழுது நமக்கு இரண்டே கதி தான்—ஒன்று சரணடையவேண்டும், மற்றொன்று சண்டை செய்யவேண்டும். நாம் சரணடைய மாட்டோம், சண்டைதான் செய்வோம். அமெரிக்காவையும் அமெரிக்கர்களையும் தெரிந்துகொண்ட எவனும் இது விஷயத் தில் சந்தேகப்படமாட்டான். இதன் பயனாய் நாம் சண்டையிடாமல், பிரிடன் ஜயிக்கவேண்டிய ஏற்பாடுகள் நாம் செய்யாதவரை நாம் சண்டையிட்டுத்தான் ஆகவேண்டும். இது விஷயமாய் நாம் ஏற்கனவே வெகுதூரம் முன் வந்து விட்டோம். இப்பொழுது இங்கிலாந்து இடும் போர் நம்முடைய போர் என்று நாம் வெளிவிட்டுச் சொல்லி இருக்கிறோம். அதேபோல் இங்கிலாந்தின் சத்துருக் கள் நமது சத்துருக்கள் என்றும் உறுதி கூறிவிட்டோம். அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்பையும், சமாதான உடன்படிக்கைகளை அவர்கள் மீறுவதையும், சர்வ தேசங்களுக்குள் பரஸ்பரம் ஏற்பட்டிருக்கும் நன்னம்பிக்கையை முறட்டுத் தனமாயும் கொலைகாரத்தனமாகவும் அவர்கள் அலக்ஷியம் செய்வதையும் நாம் கண்டித்திருக்கிறோம். மனிதர்களின் சுயேச்சைக்கும், நியாயத்துக்கும் நன் னம்பிக்கைக்கும் ஜயம் ஏற்படும்வரை நாம் யுத்தத்தில் ஸ்திரமாய் நிற்போம் என்று நாம் உறுதியாய் கூறியிருக்கிறோம். நாம் அவ்வாறு கூறியிருப்பதை அநேக ஜனங்கள் ஆமோதித்துமிருக்கிறார்கள்.

நம்முடைய உற்பத்தி சாதனங்களை அச்சுடன் சண்டையிடுபவர்களுக்கு உபயோகப்படும்படி செய்திருக்கிறோம். நம்முடைய சொந்தப் பாது காப்புக்குப் போதுமானதாயில்லாதிருந்தாலும்கூட நம் ராணுவ சாதனங்களில் பெரும்பாலானதை நாம் அவர்களுக்குக் கடனாகக் கொடுத்திருக்கிறோம். ஒத்திக் கடன் மசோதாவைச் சட்டமாய்ச் செய்திருக்கிறோம். நம்முடைய காங்கிரஸின் ஏகோபித்த அபிப்பிராயத்தால் அந்த மசோதாவுக்கு பலம் ஏற்படுத்தவேண்டி 7 கோடி டாலர்கள் செலவழித்திருக்கிறோம். நம்முடைய கப்பல் கட்டும் இடங்களையும் தளங்களையும் பிரிடிஷ் யுத்தக் கப்பல்களையும் வியாபாரக் கப்பல் களையும் சீர் செய்வதற்காக திறந்து விட்டுவிட்டோம். க்ரீன்லாந்தின் பாது காப்பை ஏத்துக்கொண்டிருக்கிறோம். அந்தந்த இடங்களில் யுத்தம் செய்யும் சைனியங்களுக்குப் பொருள்கள் கொண்டுபோய் சேர்க்கும் பொறுப்பை பிரிடனுக்குக் குறைக்க வேண்டி யுத்தம் முடிந்த பிராந்தியங்களில் அமெரிக்கக் கொடிக் கப்பல்கள் போகக்கூடாதென்றிருந்த கட்டுப்பாட்டுகளை விலக்கி விட்டோம்.

நாம் ரொம்பவும் செய்திருக்கிறோம், அதுவும் ஏராளமான பொது ஜனங்களின் அபிப்பிராயத்தின்பேரிலும் பக்க பலத்தின் பேரிலும் தான் செய்யப்பட்டு இருக்கிறது. சமீபத்தில் பொது ஜன அபிப்பிராயத்தைச் சோதித்துப் பார்த்ததில் அமெரிக்கர்களில் நூற்றுக்கு எழுபது வரை யுத்தம் வருவதாயிருந்தாலும்கூட, பிரிட்டனுக்கு உதவி புரிய வேண்டுமென்ற அபிப்பிராயமுள்ளவர்களாகவே இருக்கிறார்களென்று தெரிய வருகிறது. இவ்வளவு தூரம் சென்ற பிறகு நாம் பின் வாங்கமுடியாது. நாம் முன் வைத்த காலை பின் வைப்பதற்கில்லை. நாம் இந்த உலகப்போராட்டத்தில் ஈடுபட்டு விட்டோம்.

ஆக்கிரமிக்கும் நாடுகளை ஜயிக்கவிடக்கூடாதென்று நாம் பகிரங்கப்படுத்தி இருக்கிறோம். இதைத் தடைசெய்ய வேண்டுமென்பதில் நாம் மீற முடியாதபடி நம்மை ஈடுபடுத்திக்கொண்டுவிட்டோம். உலகத்தை தங்கள் மிருக பலத்தால் ஆளக்கூடியவர்களை முறியடிப்பதற்காக நம்மிடமுள்ள சகல சாதனங்களையும் அற்பணம் செய்துவிட்டோம். பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம், கடைசியாக ஜயிக்கப்பட்ட நாடுகளான தாழ்ந்த நாடுகள், ஸ்காண்டிநேவியா, பிரான்ஸ், பால்கன் நாடுகள், இவைகளின் கதியைப்போலவே நம்முடைய கதியும் ஆபத்திலிருக்கிறதென்பதை ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

இவ்வளவு தூரம் சென்ற பிறகு நாம் மேலும் செல்லவேண்டியதுதான். நம்மால் அனுப்பப்படும் யுத்த தளவாடங்களையும் உணவுப்பொருள்களையும் இங்கிலாந்து போய் சேரும்படி ஹிட்லர் விடமுடியாது. அவ்வாறு அவன் விட்டு விட்டால் அவன் தோற்கடிக்கப்படுவான். நம்முடைய பொருள்களை அட்லாண்டிக்கில் மூழ்கடிக்கும்படி நாம் விடமுடியாது, அவைகள் மூழ்கடிக்கப்பட்டால் நமக்குத் தோல்விதான். பிரிடனுக்கு ஒத்தாசை செய்வதாய் நாம் கொடுத்த வாக்குறுதியை நாம் நிலைநிறுத்த வேண்டும். நாம் அந்த வேலையை முடித்தே தீரவேண்டும். இதெல்லாம் நம்முடைய சாவதானத்துக்காகவும் பிற்காலத்தில் நம்முடைய காபந்துக்காகவும் அவசியமானவை. இது தான் நம்முடைய போர். சர்வாதிகாரி நாடுகளின் ஜயத்தின் கேடு விளைவிக்கும் தன்மையை அமெரிக்கர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; இப்பொழுது நாம் அடைந்திருக்கும் ஸ்திதி வரையில் நம்முடைய முன்னேற்றத்தின் ஒவ்வொரு படியையும் அபார மெஜாரிட்டியார் ஆமோதித்தும் இருக்கிறார்கள்.

கடைசியாய் கொடுமை ஒழிந்து நன்மையே ஜயிக்கும் என்ற நம்முடைய நம்பிக்கையையும், மனிதர்களின் சுயேச்சையில் நமக்கிருக்கும் அபிமானத்தையும், மனிதர்களுக்குள் தாரதம்மியமில்லாமல் சரி சமனான நியாயத்துக்காக சென்ற ஒன்றரை நூற்றாண்டுகளாக நாம் பாடுபட்டுவந்திருக்கிறோம் என்பதையும் நாம் பறை சாற்றிவிட்டு, நமக்கு ரொம்ப முக்கியமாயுள்ள ஜயத்துக்காக பிறரை தங்கள் ஸர்வ சொத்தையும் தத்தம் செய்யும்படி கேழ்க்கும் அக்கிரமமான, மிகவும் எளப்பமான ஸ்திதியை நாம் அடையக்கூடாது. நம்முடைய ஆண்மைத்தனத்தையும், சுயமரியாதையையும் காப்பாற்றிக்கொள்ள நாமும் யுத்த பாரத்தில் ஒரு பாகத்தையேனும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

# அனுபந்தம்.

## சமீபகால பரபரப்பு.

## ருஷ்யர்களுடைய ஆக்ஷேபனை.

சென்ற சில வாரங்களாக நாம் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் யுத்தம் ஏற்படலாமா என்ற யுக்தா யுக்தத்தைப் பற்றி எழுதியும் உபந்யாசித்தும் இருக்கிறோம். ஜெர்மனி பிரிட்டனுடன் போர் புரிவது முடியாத காரியமானால் ஜெர்மனி துரிதமாக தெற்கு ருஷ்யா மூலம் காகுஸஸ் (Caucasus) இரான் (Iran) இவைகளைத் தாக்குவது ஹிட்லருடைய மாறிய யோசனையாயிருக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது நடந்து விட்டது. ஜெர்மனியுடன் சிநேக பாவத்திலிருந்த ருஷ்யா திடீரென யுத்தத்துக்கு இழுக்கப்பட்டு யுத்தத்தின் கொடுமையை அனுபவிக்க நேர்ந்திருக்கிறது.

இது சம்பந்தமாக ஒரு சமாசாரம் நிச்சயமாகத் தெரிகிறது. அதாவது ஹிட்லர் தான் ருஷ்யாவை சீக்கிரம் நிச்சயமாக ஜயித்து விடலாமென்று நினைப்பதே. அவ்விதம் நினையாவிட்டால் அவர் ருஷ்யா போன்ற ஒரு பெரும் பலம் பொருந்திய தேசத்துடன் இச்சமயத்தில் போர் ஆரம்பித்திருக்க மாட்டார். மற்றவை எல்லாம் நாம் யோஜிக்க முடியாதவை.

ஸ்டாலின் என்பவர் யு. எஸ். எஸ். ஆர். சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பற்றி மிகவும் சாமர்த்தியமாகவும் நீண்டகாலமாகவும் கண்டித்து பேசியிருக்கிறார். அதிலிருந்து யுத்தத்தின் உத்தேசங்கள், திசைகள், காலநிர்ணயங்கள் இதுபோன்றவைகள், மதிப்பிடுவதைத் தவிர்த்து, யுத்தத்தின் முக்கியமான செயல்களைப்பற்றி சொல்வது கஷ்டமாகும். ஆனால் யுத்த சமாசாரங்கள் பூராவாகத் தெரியாதவர்களுக்கு மேல் சொன்ன விஷயத்தின் சில அம்சங்களை எடுத்துக்காட்டினால் அவை எவ்வளவு ஸங்கோசம், அநிச்சயமானதாகவும் இருந்தாலும், அவர்கள் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆகையால் நாம் அவைகளை இரண்டு வகுப்புகளாகப் பிரித்து சுருங்கக் கூறுவோம். அதாவது (1) அநேகமாய் நடக்கக்கூடியதாய் தோன்றுவது. (2) நடக்கலாம் அல்லது நடக்காமலிருக்கலாம் என்பது.

### வெகுவாய் சம்பவிக்கக்கூடியவை.

1. ஹிட்லர் கிழக்கிலும் இந்தியா மீதும் படையெடுக்க எண்ணம் கொண்டிருக்கிறார். இதுபோல் நினைப்பதற்குக் காரணம் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தை ஒழிக்கவேண்டுமென்றும் அவருடைய முக்கியமான விரோதியான பிரிடனுக்கு சாமான்கள் போகாவண்ணம் தடைசெய்யவேண்டுமென்றும் கனவு காண்பதே ஆகும்.

2. ருஷ்யா ஒரு பெரிய தேசம். அதன் யூக்ரேனிலிருந்து விளாடிவோஸ்டக் (Ukraine to Vladivostok) வரையிலும் அல்லது ஆர்ச்சங்கலிலிருந்து பாகு (Archangel to Baku) வரைக்கும் உள்ள பிரதேசங்களில்

அளவு கடந்த சைனியங்களும், பொருள்களும் இருக்கின்றன. அவனுடைய குகை வாயிலிருந்து ஒரு கரடியை ஒருவன் காதில் பிடித்துக் கொண்டால் கரடி இழுக்கும் இடங்களுக்கெல்லாம் அவன் அதை போகவிடுதல் என்பது முடியாத காரியம்.

3. சென்ற காலத்தில் இங்கிலாந்துக்கும் ருஷ்யாவுக்கும் ராஜ்ஜிய பரிபாலன மனோரத சிருஷ்டி ஒன்றுக்கொன்று ஒத்ததாக இருந்ததில்லை. ஆனால் ஹிட்லரும் ஸ்டாலினும் யுத்தத்துக்கு சற்று முன்பு சிக்குண்டபொழுது இருந்த நிலைமையைவிட தற்சமயம் நிலைமை சிலாக்கியமானதாகத் தெரிகிறது.

4. இப்பொழுது நடக்கிற ருஷ்ய—ஜெர்மானிய யுத்தம் பாசாங்கானதல்ல. அது நிஜநிஜமானதாகும்.

5. அதாவது தாத்காலியமாக ஆகிலும் ஜெர்மானியர்கள் யந்திரப் படையையும், ஆகாய விமானப்படையையும், அதிகமாக சிதரடிக்க நேரிடும்.

6. மிஸ்டர் சர்ச்சில் சொன்ன பிரகாரம் பிரிடிஷாரும் அமெரிக்கரும் ஹிட்லருக்கு விரோதியாக இருக்கும் யார் ஒருவருக்கும் உதவி செய்வார்கள்.

## "சாத்தியமானவைகள்".

1. ருஷ்யர்களுக்கு சேனைகளும் ஆகாயப்படையும் மிகவும் விரிவாக இருக்கின்றன. சென்ற வருஷங்களுக்கு முன் இருந்த கவனிப்பைவிட இப்பொழுது அவர்கள் கப்பற்படையை அதிகமாகக் கவனித்துவருகிறார்கள். முக்கியமாக நீர்மூழ்கிக் கப்பல்கள் விஷயத்தில் கருத்தை அதிகமாகச் செலுத்துகிறார்கள்.

2. ருஷ்யர்களுடைய விவசாய ஏற்பாடும் தொழில் விருத்தி ஏற்பாடும் அவர்களை சிரேஷ்டமாகச் செய்திருக்கும். நிச்சயமாக அவர்கள் சேனைகளுக்கு திருப்திகரமாக உணவு வசதிகளும் சம்பளமும் கொடுக்கப்பட்டுவருகின்றன. மேலும் ஒரு சாதாரண ருஷ்ய யுத்த வீரனுக்கு யுத்தத்துக்கு வேண்டியதையும் தகுந்த தளகர்த்தனையும் கொடுத்தால் நன்றாய் போர்புரிவான். அவர்களுடைய யுத்த மேலதிகாரிகள் பின்லண்டு யுத்தத்தின் நெருக்கடியிலிருந்து சென்ற இரண்டு வருஷமாக நவீன யுத்த யுக்திகளைக் கற்றுக்கொண்டிருப்பார்கள்.

3. படைகளைச் சிற்பிப்பதிலும், புது தினுசான ஆகாய விமானங்கள் செய்வதிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆகாய விமானங்களின் எண்ணிக்கையையும், புது தினுசு விமானங்களுக்கும் பழய தினுசு விமானங்களுக்கும் உள்ள எண்ணிக்கை பாகவீதத்தையும் யூகிக்க ஒருவருக்கும் முடியவில்லை.

இந்தச் சந்தர்பத்தில் இதைவிட பயனளிக்கும் விதமாய்ச் சொல்லக்கூடியதாய் யாது அதிகமாக இருக்கிறது? ஜப்பான், துருக்கி இவைகளின் நிலைமையும் சந்தேகிக்கூடியதாகவும் பிரஸ்னை செய்யவேண்டியதாகவும் இருக்கிறது. அதுபோலவே ஜெர்மனியின் சாதாரண ஜனங்களின் எதிர் தாக்கல் இருக்கிறது. ஆனால் ஒரு வினா கேட்கவேண்டி இருக்கிறது. இந்தியாவின் ஒரு பகுதி ஜனங்கள்

எவ்வளவு காலம் நம் யுத்தப் பிரயத்தனங்களுக்கு இடையூறு செய்து சதாகாலமும் பொய்யாணையிடும் இரக்கமற்ற நம் விரோதிக்கும் வசீகரிக்கப்பட்டு, அதிகாரப் பித்துப்பிடித்த, கொடூரத்துக்கு ரூபமான நம் எதிரியுடன் பலமற்ற துப்பாக்கிகளுடனும், இயந்திர தொட்டிகளுடனும் யுத்த களத்துச்கு குடும்பங்களை நாசம் செய்யும் சட்டையுடன் பின்பற்றிச் செல்லும் சகாக்களுக்கும் உதவியாயிருப்பார்கள்.

---

# வார யுத்தச் செய்திகள்.

(19—6—41-லிருந்து 25—6—41-வரை).

எதிர் பாராதது—ஒரு வேளை, எதிர் பார்க்கப்பட்டது தானோ—நடந்து விட்டது. ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் சண்டை வந்து விட்டது. மாஸ்கோவில் ருஷ்ய கவர்ன்மெண்டாரிடம் ஜெர்மன் ஸ்தானிகர் போர் என்று கிரமப்படி சொல்லுவதற்கு இரண்டு மணி நேரம் முன்னதாகவே, ஜூன் மாதம் 22-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 4-மணிக்கு, பால்டிக் முதல் கருங்கடல் வரை 1,500 மைல் நெட்டிற்கு ருஷ்யா பேரில் படையெடுப்பு முறையில் தாக்கினார்கள்.

இது அத்தியாச்சரியமாகக் காணப்பட்டது. ஆனால் ஒரு க்ஷணம் யோசித்தால் அதுதான் சம்பாவிதம் என்று மனதில்ப்படும். 22 மாதங்களுக்கு முன் இரு தேசத்தாரும் ஒப்பந்தம் செய்துகொண்டதுதான் அத்தியாச்சரியமானது. எண்ணெயும் ஜலமும் கலந்தாலும் கலக்கலாம்; நாஸி ஜெர்மனியும் அபேதவாத ருஷ்யாவும் ஒத்து நடப்பதென்பது அசம்பாவிதமானது. ஒப்பந்தமோ ஏற்பட்டது; இதன் பின் என்ன நடக்கப்போகிறதென்று எல்லோரும் கார்த்திருந்தார்கள்.

இது சமயோசிதத்திற்கேற்ற ஒப்பந்தம். ஹிட்லர் ஜனநாயக ஆட்சியுள்ள நாடுகளைத் தாக்குவதில் குறியாயிருந்தான்; அச்சமயம் கிழ் எல்லைப்புறத்தில் வம்பு கூடாது என்பது அவன் கருத்து. ருஷ்யாவிற்கோ, சண்டையில் மாட்டிக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதில் கவனம். ஆகையால், ஏதோ ஒரு வித உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதில் உபய திறப்பாரும் கையெழுத்துச் செய்யும் சமயம் உள்ளுக்குள்ளே சிரித்துக்கொண்டிருந்திருப்பார்கள்.

இந்த உடன்படிக்கை ஏற்பட்டதும் அது உடைந்ததும் அர்த்த புஷ்டியுடையவை. ஹிட்லரின் மோசக்கருத்து ஸ்பஷ்டமாக வெளியாகிவிட்டது. உலகத்தையே ஆளவேணுமென்பது அவன் நோக்கம்; அந்த எண்ணம் நிறைவேறுவதில் ருஷ்யா குறுக்கே நின்றால், அதை ஒழிக்கவேணும். தங்களுக்கு இடைஞ்சல் இல்லாதவரை ருஷ்யர்கள் ஒதுங்கியிருக்கத் தயார். ஆனால் மானத்தை

யிழந்து சமாதானமாகவிருப்பதில் அவர்களுக்கு இஷ்டமில்லை. அரசியல் காரியங்களில் ருஷ்யர்கள் காரிய வாதிகள். உடன்படிக்கையெல்லாம் ஒரு அளவிற்கு நல்லதுதான்; ஆனால் இழுத்த இழுவைக்கெல்லாம் வரவேண்டுமென்றால் அதற்கு ருஷ்யர்கள் தயாரில்லை. இந்தத் தத்துவத்தை M. லிட்வினாவ் அடிக்கடி வற்புறுத்துவதுண்டு.

ஆகையால், ஹிட்லர் உடன்படிக்கையை ஆதாரமாகக்கொண்டு அசாத்திய மான கோரிக்கைகள் போடவே, ருஷ்யா ஏமாறவில்லை. வந்துவிட்டது கோபம் ஹிட்லருக்கு; விரட்டியடிக்க வேணும் என்று தீர்மானித்தார். பிரெஞ்சுக்காரர் சொல்லுவதுண்டு "இந்தப் பிராணியை எதிர்த்தால் அது தன்னை காப்பாற்றிக் கொள்ள பார்க்கிறது; இது துஷ்ட பிராணி." ஹிட்லர் நடவடிக்கை இப்படி யிருக்கிறது.

சர்வாதிகாரிகளுக்கு ஹாஸ்ய உணர்ச்சி கிடையாதென்பார்கள். அரசியல் காரியங்களில் சமீபத்தில் தலைகீழ்ப் பாடமாக நடந்திருக்கும் காரியங்களைக் கவனிக்க இது சரியென்றே நினைக்கவேணும். முன்காலத்தில் ஹிட்லர் அபேதவாத முறையைக் கையாடும் ருஷ்யரை முழுமனதுடன் வெறுத்தான். 1939-ம் ஆகஸ்டு, செப்டம்பர் மாத உடன்படிக்கைகள் காலத்தில் வேறு ராகத்தில் பாடத் தொடங்கினான்; இப்போது அபேதவாத முறையென்ற ஆபத்தினின்றும், இவ்வுலகை தப்புவிப்பதே தன் நோக்கம் என்பதை பறையடிக்கிறான். ஆனால் ஒருவரும் அதை நம்பவில்லை. ஹிட்லர் சாப்பாட்டில் வெகு கணக்கானவன் என்று சொல்லுகிறார்கள். தான் ஒரு சமயம் சொன்னவார்த்தைகளையே மற்றொரு சமயம் கடித்து விழுங்குகிறவனாயிருப்பதால் இதில் ஆச்சரியமில்லை.

இச்சமயம் ருஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் யுத்தம் ஏற்பட்டது ரொம்ப நல்லது. இரண்டு பக்கங்களில் சண்டை போடுவதால் ஜெர்மானியருக்கு சக்தியும், கவனமும் கலைபடும். சீக்கிரம் வெற்றியடையலாமென்று ஜெர்மானியார் எண்ணு கிறார்களாம். இவ்வெண்ணம் சரியானதாகவிருக்கலாம்; சரியில்லாமலிருக்கலாம். எந்நிலைமையிலும் ருஷ்யாவுடன் சண்டைமுடிந்து உதைபட்டு சீர்குலைந்து திரும்பும்போது பிரிடிஷாருடன் சண்டைபோட செய்லிராது. மேலும், பிரிடிஷார் ராணுவ சீர்திருத்தம் பரிபூர்ணமாகச் செய்ய இன்னும் கொஞ்சம் சாவகாசம் கிடைக்கிறது. அதற்குள் அமெரிக்காவிடமிருந்து பிரவாகமாக சாமான்கள் வர ஆரம்பித்துவிடும். தரை, கடல், ஆகாயம் இவைகளில் பிரிடிஷார் பலம் ஏராளமாக அதிகரித்துவிடும்.

ருஷ்யரும் சாதாரணமானவர்களில்லை. பெரும் சைனியமுண்டு. அளவற்ற இயற்கை சாதனங்களுண்டு. வெகு பலமான விமான இலாகா நாளடைவில் தயாரித்துவிட்டார்கள். போக்குவரத்து சாதனங்கள் முன்னே மட்டாயிருந்தன. இப்பால் அதிகமாகிவிட்டன. ருஷ்யப்படையானது அபாரமானபடை. ஆயுத பலமும், கனமும், எதிர்ப்பில் வலுவும்கொண்டது. ருஷ்ய ஜனப்பெருக்கும்

இயற்கை சாதனங்களுமோ எதிரியை நடுக்கமெடுக்கும்படி செய்யப் போதுமானவை. வெடிகுண்டுபோடும் உயர்தரமான விமானங்கள் ஏராளமாகவிருக்கின்றனவாம். இந்தப்போரில் ஜெர்மன சப்பை பிதிர்ந்துபோகும் என்று பலர் சொல்லுவது ஒத்துக்கொள்ளக்கூடியதாகவிருக்கிறது.

ருஷ்யாவும் தனிமையில் சண்டையிடப்போவதில்லை. மனிமதளத்தனத்தில் முடிந்தவரை ருஷ்யாவுக்குச் சகாயம் செய்யப்போவதாக பிரிடிஷ் பிரதம மந்திரி சொன்னார். இதை ஒத்து ஜெர்மன் பேரிலும் ஜெர்மன் ஆக்கிரமண பிரான்ஸ் பேரிலும் துறைமுகங்கள் பேரிலும் பிரிடிஷ் விமானப்படை வெடிகுண்டு போட்டு தகர்க்கிறார்கள். இந்த எதிர்ப்பால் ஜெர்மனியின் இடுப்பு ஒடிந்து போகும்.

இதுமட்டுமல்ல. பிரிடிஷ் ராணுவ கோஷ்டிகளும் பொருளாதார கோஷ்டிகளும் ருஷ்யாவுக்குச் சென்று ஒத்து வேலைசெய்ய ஏற்பாடாகிறது. Mr. ரூஸ்வெல்டும் தாராளமாக உதவி செய்வதாக வாக்களித்துவிட்டார். இதுவரை துருக்கி ருஷ்யாவிற்கு விரோதமாக ஒன்றும் செய்யவில்லை; பழைய உடன்படிக்கையை துருக்கி மீறும் என்று நினைக்க இடமில்லை.

பெர்லின் நகரத்தார் மனோபாவத்தை ஒரு அமெரிக்கப் பத்திரிகை நிருபர் விளக்கியிருக்கிறார். அவர்கள் பிரமித்துப்போயிருக்கிறார்களாம். "தூக்கி வைக்கப்பட்டிருக்கிறோமா, கீழே தள்ளப்பட்டிருக்கிறோமா, என்று புரியவில்லை. ஆட்டம் என்ன, பந்து யார் கையில் இருக்கிறதென்று புரியவில்லை" என்று எண்ணுகிறார்களாம்.

சண்டை விவரங்கள் சொற்பமாகத்தான் கிடைக்கின்றன. ஆனால் ஜெர்மானியருக்கு ருஷ்யர் பின் வாங்கவில்லை என்று நன்றாய்த் தெரிகிறது. ஜெர்மானியர் கீழ் எல்லைப்புறம் நெடுகிலும் தாக்குகிறார்கள். ஆனால் அவர்கள் பால்டிக் நாடுகள் வழியே லடெவியா, லிதுவேனியாவுக்குப்போய், ருஷ்யர்களை பால்டிக் துறைமுகங்களிற்குப்போகவொட்டாமல் தடுக்க வேண்டிய எண்ணம் உள்ளவர்களாயிருக்கிறார்கள். ருமேனியத் துருப்புகள் ஜெர்மன் துருப்புகளுடன் சேர்ந்து வட புக்கொவினா, பெஸரேபியாவிலிருந்து படையெடுத்து வலுவாய் எதிர்க்கப்பட்டார்கள். ஜெர்மானியர் ப்ரெஸ்ட்-லிடோவிஸ்க்கை பிடித்துக்கொண்டார்கள். மற்ற இடங்களில் துறத்தப்பட்டார்கள். ருஷ்யர்கள் தென் போலந்தில் எதிர்த்துச் செல்லுகிறார்கள். ஜெம்மில்லை (Przemysl) பிடித்துக் கொண்டார்கள். எதிரியை திணற அடிக்கிறார்கள். ஜெர்மன் விமானங்கள் ஏராளமாக விழுத்தாட்டப்பட்டன. ஏராளமான ஜெர்மன் "டாங்குகள்" உடைக்கப்பட்டன. ப்ருத் நதிக்கு கீழ்கரை ருஷ்யர் வசம் இருக்கிறது. பின்லண்டில் ஜெர்மன் விமான நிலயங்கள் பேரில் குண்டுகள் போட்டுத் தாக்குகிறார்கள்.

## பிரிடிஷ் விமான தாக்கல்கள்.

ஜூன் 22-ல், ஜெர்மனியை இரவும் பகலும் இடைவிடாது தாக்குவோம் என்று Mr. சர்ச்சில் சொன்னார். இதை அனுசரித்து பிரிடிஷ் விமானிகள்

ஜெர்மனியில் ராணுவ நிலயங்களை த்வம்சம் செய்து வந்திருக்கிறார்கள். ஒரு வியாக்யானி சொன்ன பிரகாரம் பிரிடன் சண்டையானது ஜெர்மன் சண்டையாக சீக்கிரம் மாறிவிடும்.

## ஸிரியாவில் சண்டை.

ஸிரியாவில் சண்டை நடந்து வருகிறது. டமாஸ்கஸ் பிடித்தாய்விட்டது. பால்மைரா பிடித்தாய்விட்டது. மெர்ஜ் ஆயூமை நமது துருப்புகள் பிடித்துக் கொண்டார்கள். விஷி துருப்புகள் பறந்தோடுகின்றன. பேருட்டிற்கு நெருங்கி விட்டோம். விமான தாக்கல் பலமாகச் செய்கிறோம். பிரான்ஸிலுள்ள ஜெர்மன் ஸ்தானிகர் ஹெர் ஆட்டோ ஆவெட்ஸ், விஷி கவர்ன்மெண்டார் வேண்டுகோள் படி, ஸிரியாவில் விஷி துருப்புகள் நிலைமை கேவலமாய்விட்டதென்று தெரிவிக்க பெர்லின் போயிருக்கிறார். இதை விட என்னவேணும், ஸிரியாவில் எதிரி நிலைமையைக் காட்ட.

## அபிஸீனியா.

ஜிம்மா பிடிபட்டது. ஒரு இதாலிய தளகர்த்தர் உள்பட 8,000 பேர் கைது செய்யப்பட்டார்கள். இந்தியத் துருப்புகள் நாட்டு துருப்புகளுடன் எதிரியை சூழ்ந்து வருகின்றன. அபிஸீனியா பூராவும் அநேகமாக கைவசமாக, ஹெயிலி ஸெலாஷி கையில் சேர்ப்பிக்கப்பட்டு வருகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 16—6—41. (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—படையெடுப்பு—டோவர் (Dover), ஜலசந்தி இங்கிலீஷ் கால்வாய் (English Channel), பிரெஞ்சுக் கடற்கரை (French Coast). | ... | ...... |
| | ரயில்வே ஸ்டேஷன், பெரிய சாமான் கிட்டங்கி.—புலாயின் (Boulogne). விமானச் சண்டைகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பிரான்ஸ் (France). | 6 விமானங்கள். 2 விமானிகள் பத்திரம். | 11 விமானங்கள். ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **16—6—41.** | (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.** | | |
| | மாலையில்.—விரோதிக் கப்பல்கள் இங்கிலீஷ் (English) காவாய். | 10 விமானங்கள். | 13 விமானங்கள். |
| | இரவில்.—யுத்த தொழிற் சாலைகள் கொலோன் (Cologne) டஸ்ஸல் டார்ப் (Dussel Dorf), டூயிஸ்பர்க் (Duisberg). | ... | பலத்த சேதம். பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | கப்பல் துறைகள்.-புலாயின் (Boulogne). | ... | ...... |
| | துறைமுகம், கப்பல் துறைகள்.—டன்கர்க் (Dunkirk.) | நஷ்டமில்லை. | ...... |
| | **ஸிரியா (Syria).** | | |
| | விமானங்கள் இறங்குமிடங்கள், விமானக் கட்டடங்கள். ரயாக் (Rayak). | ... | பெரிய வெடிச்சத்தங்கள் கிளம்பின. |
| | விரோதி மோட்டார் வண்டிகள்.—குனீத்திரா (Kuneitirah). | 9 விமானங்கள். | 1 விமானம், பல சேதமாயின. |
| | விமானச் சண்டைகள்.—ஸிரியா (Syria). | ... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ஒத்தாசை.-பிரிடிஷ் தரைப்படைகளுக்கு. | ... | ...... |
| | விமானச் சண்டை—ஸிரினேகா (Cyrenaica) பல இடங்களில். | ... | 2 விமானங்கள்; பல சேதமாயின. |
| | துறைமுகப் பிரதேசம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ... .. |
| | விமானங்கள் இறங்குமிடங்கள்—டெர்னு (Derna), எல் கஸாலா (El Gazala). | 6 விமானங்கள். | ...... |
| | மோட்டார் வண்டிகள்.—ஸிரினேகா (Cyrenaica). | ...... | தீப்பிடித்தன. |
| **17—6—41.** | (செவ்வாய்க்கிழமை). | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—படையெடுப்பு—இங்கிலீஷ் கால்வாய், (English Channel), வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | விரோதிக் கப்பல்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| | தொழிற்சாலை.—பெதூன் (Bethune). | ...... | தீப்பிடித்தது. |
| | விமானச் சண்டைகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | 10 விமானங்கள். | 16 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **17—6—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.** | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள்.—கொலோன் (Cologne), டஸ்ஸல்டார்ப் (Dussel-Dorf). | ...... | வெடிகளும், தீயும் கிளம்பின. |
| | கப்பல் துறைகள்—ராட்டர்டாம் (Rotterdam), ஆஸ்டெண்ட் (Ostend), புலாயின் (Boulogne), செர்பார்க் (Cherbourg). | ...... | சேதமாயின. |
| | விரோதிக் கப்பல்கள்.—வடகடல் (North Sea). | 1 விமானம். | ...... |
| | **ஸிரியா (Syria).** | | |
| | ஒத்தாசை.—பிரிடிஷ் தரைப்படைகளுக்கு. | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி மோட்டார்கள்.—எல்கஸாலா (El Gazala)ப் பிரதேசம். | ...... | ...... |
| | விரோதி மோட்டார் வண்டிகள், கவசமணிந்த மோட்டார்படை.—ஸிடி ஓமர் (Sidi Omar)ப் பிரதேசம். | ...... ...... | பலத்த சேதம். 20 வண்டிகள் நாசமாயின. |
| **18—6—41.** (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்** | | |
| | பகலில்.—கப்பல் துறைகள், சிறிய துறைமுகங்கள், எண்ணெய்த் தொட்டிகள் லாஹார் (Le Havre). | ...... | ...... |
| | விரோதிக் கப்பல் (நாசகாரிகள் புடைசூழ).—பிரெஞ்சு (French)க் கடற்கரை. | ...... | ...... |
| | மாலையில்.—படையெடுப்பு—டோவர் (Dover) ஜலசந்தி, வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | இரவில்—துறைமுகங்கள், கடற்படை தளங்கள்—வட மேற்கு ஜெர்மனி (Germany), ப்ரமன் (Bremen) உள்பட. | ...... | சேதமாயின. |
| | கடற்படை தளங்கள், மூன்று ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்.—ப்ரெஸ்ட் (Brest). | ...... | தகர்க்கப்பட்டன. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; | எதிரிகளின் விமான படையெடுப்புகளால் நஷ்டம். விளைந்த சேதமும். |
|---|---|---|
| **18—6—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **ஸிரியா (Syria).** | | |
| விஷி (Vichy) துருப்புகள்.—டமாஸ்கஸ் (Damascus). | ...... | ...... |
| கப்பல்கள்.—பீரட் (Beirut) துறைமுகம். | ...... | ...... |
| விமானச் சண்டை.—ஸுயீடா (Soueida). | ...... | 2 விமானங்கள். |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| பாது காந்தல்.—மேற்குப் பாலைவனம்... | ...... | ...... |
| விமானமிறங்குமிடங்கள்.—டெர்ண (Derna), எல்கஸாலா (El Gazala). | ...... | 1 விமானம். |
| கப்பல்கள், துறைமுக கட்டடங்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | பல இடங்களில் தீப் பிடித்தது. |
| **19—6—41.** (வியாழக்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| இரவில்.—தொழிற்சாலைகள்—கொலோன் (Cologne), டஸ்ஸல்டார்ப் (Dussel-Dorf). | ...... | 2 இடங்கள். |
| **ஸிரியா (Syria).** | | |
| ஒத்தாசை.—பிரிடிஷ் தரைப்படைகளுக்கு. | ...... | ...... |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| விரோதி மோட்டார் வண்டிகள்.—மேற்குப் பாலைவனம். | ...... | ...... |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi) ... | ...... | ...... |
| **20—6—41.** (வெள்ளிக்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—விரோதிக் கப்பல்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | நஷ்டமில்லை. | மூழ்கடிக்கப் பட்டது. |
| காவல் காக்கும் ஒரு சிறிய யுத்தக் கப்பல்.—டென்ஹெல்டர் (Denhelder). | ...... | ...... |
| இரவில்.—கடற்படை தளங்கள், கப்பற் கட்டுமிடங்கள்.—கீல் (Kiel). | ...... | ...... |
| கப்பல் துறைகள்.—டங்கர்க் (Dunkirk), புலாயின் (Boulogne). | 1 விமானம். | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**20—6—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

### ஸிரியா (Syria).

| | | |
|---|---|---|
| கவசமணிந்த மோட்டார் வண்டிகள்.—டமாஸ்கஸ் (Damascus), பீரட் (Beirut) ரஸ்தா. | ...... | பல வண்டிகள் சேதமாயின. |
| மோட்டார் வண்டிகள்.—டமாஸ்கஸ் (Damascus)ப் பிரதேசம். | ...... | ...... |
| கப்பல்கள்.—பீரட் (Beirut) துறைமுகம். | ...... | ஒரு கடல் மூழ்கி கப்பல் தாக்கப்பட்டது. |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விமான நிலயம், தரையிலிருக்தும் விமானங்கள்.—மிஸுராடா (Misurata). | ...... | 3 விமானங்கள் நாசம். பல விமானங்கள் சேதமாயின. |
| ஒத்தாசை.—பிரிடிஷ் தரைப்படைகளுக்கு | நஷ்டமில்லை. | ... |

**21—6—41.** (சனிக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—படையெடுப்பு—இங்கிலீஷ் கால்வாய் (English Channel) வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| விமான நிலயங்கள்.—ஸெண்ட் ஓமர் (St-Omer), புலாயின் (Boulogne). | 4 விமானங்கள். | 28 விமானங்கள். |
| இரவில்.—தொழிற்சாலைகள்—கொலோன் (Cologne), டஸ்ஸல்டார்ப் (Dussel-Dorf). | ...... | ...... |
| கப்பல் துறைகள்.—டங்கர்க் (Dunkirk), புலாயின். (Boulogne). | 1 விமானம். | ...... |
| படையெடுப்பு.—வட பிரான்ஸி(France)லிருக்கும் விமான நிலயங்கள். | ...... | பலத்த சேதம். |

**22—6—41.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—படையெடுப்புகள்—வட பிரான்ஸி (France)ன் கடற்கரைகள், இங்கிலீஷ் (English) கால்வாய். | ...... | ...... |
| சாமான் கிட்டங்கி.—ஹேஸிப்ரூச் (Hazebroack). | ...... | 27 விமானங்கள். இன்னும் பல |
| விமானச் சண்டைகள்.—வட பிரான்ஸ் (France). | 1 விமானம். | விமானங்கள் சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **22—6—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிரியா (Syria).** | | |
| | துறைமுகம் கப்பல்கள்.—பீரட் (Beirut). | ...... | ஒரு நாசகாரி மேல் குண்டு வீழ்ந்தது. ஒரு கப்பல் தீக் கிரையாகியது. பலத்த நஷ்டம். |
| | விஷி (Vichy) மோட்டார் வண்டிகள்.—டமாஸ்கஸ் (Damascus), பீரட் (Beirut) ரஸ்தா. | ...... | பல வண்டிகள் நாசமாயின. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | நாசகாரிகள் புடைசூழ விரோதி வியாபாரக் கப்பல்கள்.—ட்ரிபோலிடானியா (Tripolitania)வின் கடற்கரைக்குச் சமீபத்தில். | ...... | 1 பெரிய கப்பல் சேதமாயிற்று. இன்னும் பல சிறிய கப்பல்கள் சேதமாயின. |
| | **கிழக்கு ஜெர்மனி (Germany).** | | |
| | ருஷ்ய விமானங்களால் பல இடங்கள்.—கிழக்கு பிரஷ்ஷியா (Prussia). | ...... | ...... |

---

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| **தேதி.** | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **17—6—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கடற்கரை. | ...... | ...... |
| | **ஆபிரிக்கா (Africa).** | | |
| | பல விமான யுத்தங்கள்.—ஸிரீனேகா (Cyrenaica). | 2 விமானங்கள். | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 18—6—41. (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia). ஒரு இடம்.—கிழக்கு மிட்லண்ட்ஸ் (Midlands). | ...... 1 விமானம். | சேதம் சொற்பம். சிலருக்குத்தான் காயம். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | ...... | ஒருவன் கொல்லப்பட்டான். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 1 விமானம்; 2 விமானங்கள் சேதமாயின. | சேதமேயில்லை. |
| 19—6—41. (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில் அங்குமிங்குமாக பல இடங்கள்.— இங்கிலாந்து (England). | 1 விமானம். | மிகச்சொற்பச் சேதம். |
| 20—6—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—அங்குமிங்குமாக ஓர் சில இடங்கள்.—இங்கிலாந்து (England). ஓர் இடம்.—ஸ்காத்லாந்து (Scotland). | ...... | ஒருவருக்கும் காயம் இல்லை. சேதம் சொற்பம். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | ...... | சொத்துக்கு சிறிது சேதம். |
| 21—6—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | ஒரு பட்டணம்.—தென் இங்கிலாந்து (England). | } 4 விமானங்கள். ...... | சிலருக்குக் காயம். |
| | சில இடங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து, ஸ்காத்லாந்து (Scotland). | } | சொற்பச் சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **22—6—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—லண்டன் (London)–(விமான அபாய எச்சரிக்கை மாத்திரம்தான்). | ...... | ...... |
| | பிரதேசம்.—இங்கிலாந்தி (England)ல் தென்கிழக்குக் கடற்கரை. | ...... | ...... |
| | ஒரு கடற்கரைப் பட்டணம்.—வடகிழக்கு இங்கிலாந்து (England). | ...... | வீடுகளுக்குச் சேதம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). ... | 7 விமானங்கள். | 1 விமானம்; அந்த விமானியும் பத்திரமாயிருக்கிறார். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | விமான நிலயங்கள்.—மேற்கு ருஷ்யா (Russia). | 76 விமானங்கள். | ...... |
| **23—6—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England), கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ...... | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| | பிரிடிஷ் துணைகாவல் கப்பல்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | சேதமேயில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria) ... | ...... | சிலர் கொல்லப் பட்டனர். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | சைனியங்கள், விமானங்கள், ஜனங்கள் வசித்துமிடங்கள், ராணுவ முக்கியமான இடங்கள்.—ருஷ்யா (Russia). | 52 விமானங்கள். | ...... |

# யுத்தக் குறிப்புகள்.

---

## மஞ்சள் நிற அபாயம்.

சமீபத்தில் கொஞ்ச காலமாக ஜப்பான் சம்பந்தமான செய்திகள் கொஞ்சம் விசித்திரமாகவிருக்கின்றன. பணம் மாற்றல் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் அவர்களுடன் செய்துகொண்டோம். போரொன்றில்லாத வரை வியாபார வசதிக்காக அது அவசியம். வேறு தகவல்களையே காணோமேயென்று தான் சொல்லுகிறேன். Mr. ரூஸ்வெல்ட் கூட, சீனர்களை பெருமைப்படுத்திப் பேசியபோதிலும் ஜப்பானைப் பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. Mr. மத்ஸூவோகாவும் சாதாரணமாக விடும் கயிறுகளைத் தவிர அந்தப் பிரசங்கத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அதன் பேரில், அச்சுதேச அரசியல் வாதிகள் ஜப்பான் அயல் நாட்டு மந்திரியை பேட்டி கண்டார்கள் ..........அவ்வளவு தான், வேறொன்றையும் காணோம்...... அதன் பேரில் அமெரிக்கா போரில் புகுந்தால் ஜெர்மனிக்கு ஜப்பான் சகாயம் செய்யுமென்று பெர்லின் ரேடியோ வெளியிட்டது. ....................ஆனால் பிரிடனுக்கும் இந்தியாவிற்கும் விடுத்த செய்திகளில் அதைப்பற்றி ஒரு பேச்சுமில்லை! கப்பல் சீட்டு முறையை தழுவ மாட்டோம் என்றார்கள் ஜப்பானியர்! ஆனால் அது பேச்சளவிற்குத்தான்! நடப்பில் அனுமதிச்சீட்டு வாங்கி வருகிறார்கள்! போதாததற்கு, எண்ணெய் ஸப்ளை செய்யவேணுமாய் பிரிடனை கேட்கிறார்கள்!

எல்லாம் விசித்திரந்தான். இதற்குக் காரணம், இதாலியைப் போல் ஜப்பானும் போன வருஷம் பிரிடன் தலை தூக்காதென்று நினைத்து ஜெர்மனிக்கு கும்பிடு போட்டார்கள். தங்கள் நினைப்பு தவறு என்று அவர்களுக்கு புலப்பட்டுவிட்டது. அதனால் ஐயமடைந்து ஜெர்மனிக்கு 'லோடா' வாகவிருக்கத் தயாராகவிருந்தபோதிலும் தாங்கள் வெற்றிக்காக போர் புரியத்தயாராகவில்லை.

## ஜெர்மானியரும் வட ஆபிரிக்காவும்.

சமீபத்தில் இங்கிலீஷ் பத்திரிகை ஒன்றுக்கு வந்த செய்தியை இதில் பிரசுரம் செய்தோம். விவரங்களோடு சொல்லப்பட்ட போதிலும் வட ஆபிரிக்காவில் ஜெர்மானியர் ஆக்கிரமிப்பதைப்பற்றி செய்திகளை முழுவதும் நம்பவேண்டாமென்று எச்சரிக்கையான செய்தி. நாம் பிரசுரித்தது நடப்பை அனுசரித்ததென்று ஸர்க்காரரே ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

சென்ற ஸெப்டம்பர் மாதத்தில், டாகார் வரை ஜெர்மனியின் எண்ணம் எட்டியிருந்ததென்று டாகார் சம்பவத்திலிருந்து தெரியவந்தது. டிகால் வந்தபோது நேர்ந்த எதிர்ப்பானது ஜெர்மானியர் கிளப்பிவிட்டதென்பது தெரியும். அது முதற்கொண்டு விஷி கவர்ன்மெண்டார் செயலற்றுப் போகப்போக ஜெர்மன் கைவரிசை வழக்கம்போல் இறங்கி வருகிறது.

ஹுனா ஆக்கிரமணத்திற்குக் காரணம் நமக்குத் தெரியும். அவர்களுக்கு வேண்டியது :—

(a) பிரிடனையும் அமெரிக்காவையும் தாக்க, அட்லாண்டிக் யுத்தத்தில் உபயோகிக்க நிலயங்கள் தயாரிக்கவேணும்;

(b) விஷி வர்க்கத்தாரை நெருக்கவும், தளகர்த்தர் வேகாண்டின் செல்வாக்கைக் குறைக்கவும்;

(c) மத்தியரேகை ஆபிரிக்காவில் தளகர்த்தர் டிகாலுக்கு நேரும் வெற்றியை நிறுத்தவேண்டியது;

(d) பிரெஞ்சு ஜனங்களுக்கு என்று பேர் பண்ணி, உண்மையில் ஜெர்மானியருக்காக கைப்பற்றப்பட்ட சாமான்கள் எப்போதும் போல் வந்து கொண்டிருக்கும்படி செய்யவேண்டியது.

அச்சு கமிஷன்கள் துவக்கியபோது ஆரம்பித்தது இந்த வித்தை. இந்தக் கமிஷன்கள் ஆரம்பித்த சமயம் பெரும்பாலும் இதாலிய கமிஷன்கள். ஆனால் இப்போது, பைசர்டா, ஆல்ஜியர்ஸ், ஓரான், கோனிட்ரா, கஸாப்ளாங்கா இவைகளில் இருக்கின்றன. ராபாட், அகாடிர், ஸாபி, மாராகெஷ்ஷில் ஜெர்மன் துருப்புகள் இருக்கின்றன.

சமாசாரம் தெரியும்வரை நாம் கவலைப்பட வேண்டியதில்லை; ஆயினும் இந்த நடவடிக்கைகளைப் பார்க்க, நமது பழைய நண்பர்களிடம் நமக்கிருந்த மதிப்பும் அன்பும் அதிகரிக்க இடமில்லை!

## இரண்டாம் ரகம்தான்.

நான் சமீபத்தில் ஒரு பிரசங்கத்தில் சொன்னபடி, பிரிடனைப் படையெடுக்க வேணுமென்ற ஆசை ஹிட்லருக்கு நிறைவேராத வரை, அவன் செய்யக்கூடியதாக 4 காரியங்கள் உண்டு. ஸ்பெயின் வழியாகபோய் ஆல்ஜியர்ஸ், மொராக்கோ வழி டாகார் போக பார்க்கலாம். இந்த மார்க்கம் போவதில் கொஞ்சம் தடை ஏற்படலாம். பாக்கி 3 காரியங்களாவன :—

1. கிரீட், ஸைப்ரஸ் வழியாகவோ, ஒருவேளை துருக்கி வழியாகவோ, சென்று ஸிரியாவை கைப்பற்றுவது.

2. அதே சமயம் லிபியா மூலம் எகிப்தை தாக்குவது.

3. காகேஸியமலையிலும், இரானிலும், இராக்கிலுமுள்ள எண்ணெய்க் குளங்களைப் பிடிக்க ஒரு முண்டு முண்டுவது. ருஷ்யா பேரில் படையெடுத்து தென் ருஷ்யா, யூக்ரேனின் பக்கமுள்ள செழிப்பான நிலங்களை அபகரிப்பது.

இவைகளெல்லாமே, அல்லது ஏதேனும் சில நடைபெறக்கூடுமென்று கொஞ்ச காலமாக எதிர் பார்க்கப்பட்டது. இராக்கும், ஸிரியாவும் ஹிட்லர் வசமாகவில்லை. ஸ்பெயின் பேரிலும் படையெடுப்பில்லை. துருக்கியுடன் (ருஷ்யாவுடனும் இருக்குமோ?) உடன படிக்கைகள்; இவை போரில் கிடைத்த வெற்றிகளல்ல; எகிப்தில் தளகர்த்தர் வேவல் பேரில் வெற்றியடைய முடியாதபடி. சூடு—சிநேகோஷ்ண ஸ்திதியிலும் சரி, அவர் எதிர்ப்பின் மும்மரமும் சரி.

மேலும், ஹிட்லரும் ஆங்கிலேயரும் ஒரு விஷயத்தில் மட்டில் ஒரே மனதாய் இருக்கிறார்கள். அதாவது, ஹிட்லர் பிரிடன் பேரில் படையெடுக்க முயல வேண்டுமென்பதில்!

சுருங்கச் சொல்லில், இதுதான் விஷயம். ஜயமும் சமாதானமும் கைக்கெட்டுமென்ற வருஷமும் கடந்து, மறு வருஷத்தில் பாதியாகி விட்டது; ஹிட்லருக்கு மிச்சம், ஜனங்களுக்கு ஜாஸ்திவேலை, சுருங்கின வயிறுகள், ஜன நெருக்கடியான ஆஸ்பத்திரிகள், அமெரிக்காவின் எதிர்ப்பு வேலை, காலதாமதத்தால் கெடும்பு. இவைகள்தான் ஹிட்லரின் ஜனங்களுக்கு எதிர் காலத்தில் நேரும் சம்பவங்கள் என்ற பயம் அதிகரிக்கிறது.

**குறிப்பு.**—மேலே கண்ட முடிவிற்கு யோசனையின் பேரில் வந்த பிறகு, ஜெர்மானியர் ருஷ்யா பேரில் படையெடுத்து விட்டார்கள் என்ற செய்தி வருகிறது! ஹிட்லரால் பத்திராதிபர்களுக்கு அலக்கழிவு ஜாஸ்திதான். ஆயினும் நாம் எதிர்பார்த்த விஷயங்களில் ஒன்றேனும் நடந்து விட்டது! நமது குருவிகளில் ஒன்று ஜயித்துவிட்டது!

## குருட்டு அடி.

ஆகாயத்திலிருந்து விழும் வெடி குண்டுகளால் தாக்கப்படும் பட்டணங்களின் சங்கியை ஜாஸ்தியாகி வருகிறது. நார்விக்கிலிருந்து பாஸ்ரா வரைக்கும், டப்ளினிலிருந்து அலெக்ஸாண்டிரியா வரைக்கும் இந்த விபத்து அனுபவமுண்டு; இந்த விபத்தான அனுபவம் எச்சமயம் ஸைப்ரஸிலிருந்து கராச்சி வரையும் ஹாங்காங்கிலிருந்து மதராஸ் வரையும் வருமோ? இப்போது அலெக்ஸாண்டிரியா பேரில் குண்டுகள் போடுகிறார்கள். இதில் பிரயோஜனமில்லை. சில ஜனங்களும் ஹோட்டல்களும் விடுதிகளும் தாக்கப்படுவதை விர ஒரு பலனும் கிடையாது. பிரிடிஷ் கப்பற்படையின் ஒரு பகுதி அங்கேயிருக்கிறதென்பது உண்மை; அதை இன்னமும் எதிர்ப்பார்கள்; அலெக்ஸாண்டிரியா விமானங்களைச் சுடும் பீரங்கிகளாலும் கப்பற் பீரங்கிகளாலும், பகலிலும் இரவிலும் வேலை செய்யும் விமானங்களாலும் பாதுகாக்கப்பட்ட போதிலும், வேறு துறைமுகங்கள் நமக்கு இருக்கின்றன.

ஹைபா (Haifa) நல்ல துறைமுகம்; அங்கே எண்ணெய் உண்டு. ரிபேர் செய்ய வசதியுமுண்டு. நேற்று டமாஸ்கஸை பிடித்தோம்; பேரூட், ட்ரிபோலி, லடாகியா போன்ற துறைமுகங்கள் நமது வசம் வந்துவிடும்; நமது ஸிரியா படகுகளைப் பாதுகாக்க மால்டா தீவு தலைதூக்கி நிற்கிறது.

## ஸிரியா.

டமாஸ்கஸ் என்று சொன்னவுடன் பொது மனிதர்களுக்கு டமாஸ்கஸ் எந்த தேசத்திற்கு ராஜதானி என்று தெரியுமோவென்று நான் சந்தேகிக்கிறேன். நாம் ஒவ்வொரு ஊருக்கு நுழையும் போது நாம் அந்தந்த இடத்தை நமது விரோதி பிடிக்காவிட்டால் நமக்கு அந்த இடத்தில் யாதொரு அபிலாஷையில்லை என்பதை தெளிவாக விளக்கி வருகிறோம். இதில் ஆச்சரியமில்லை. ஏனென்றால்

கீழே வரும் புள்ளிக் கணக்கைப் பாருங்கள். அந்த தேசத்தின் ஜனத்தொகை 32½ லக்ஷமானது 8 பிரிவுகளாகவும் ஒவ்வொரு பிரிவுக்கும் சரித்திர மத சம்பந்தமான கொள்கைகள் வெவ்வேருகவும் முன் நோக்கங்கள் வெவ்வேருகவும் அமைந்திருக்கிறது. அவைகளாவன :—

(1) ஸன்னி முகமதியர்கள்—இவர்கள் தான் அதிகம்—20 லக்ஷம்.

(2) ட்ரூஸ்கள்—இவர்கள் கி. பி. 1050-ம் வருஷம் ஒரு காலீப்பால் ஸ்தாபிக்கப்பட்ட முகமதிய மதத்தைச்சேர்ந்தவர்கள். ஜபல்டுரூஸ் என்னும் காட்டுப்பிரதேசத்தில் வசிப்பவர்கள்—1,30,000.

(3) லெபனனுக்கு வடக்கே மலைப்பிரதேசத்தில் இருக்கும் மாரோனைட் என்று சொல்லப்படும் கிறிஸ்துவர்கள் 10,00,000.

(4) லடாகியா துறைமுக சமீபத்தில் வசிக்கும் மற்றொரு முகமது பிரிவினர் 2¾ லக்ஷம்.

(5) துருக்கியிலிருந்து சென்ற சண்டைக்குப்பிறகு தப்பியோடி வந்த ஆர்மீனியர்கள் 1½ லக்ஷம்.

(6) அராபி ஜாதியரைச் சேர்ந்த கிரேக்க கிறிஸ்துவர்கள் 2,80,000.

(7) ஷீயா முகமதியர்கள் 1,65,000.

(8) இராக் தேசத்திலிருந்து வரும் சால்தியர்கள் அசிரியர்கள் உள்பட மற்ற கிறிஸ்துவர்கள் 2 லக்ஷம்.

இந்த தேசத்தின் அரசாங்கமும் ஒரு வகைபட்டதல்ல. 2 சுதந்திர நாடுகள் அதாவது லெபனன்—பாலஸ்தீனுக்கு வடக்கு பாதி பாகம். பேரூட் இதன் ராஜதானி. எண்ணெய் துறைமுகமான ட்ரிப்போலியும் விமான துறையான ரயாக்கும் இதில் தான் இருக்கிறது.

(2) ஸிரியா—இது டமாஸ்கஸிலிருந்து ஆளப்படுகிறது. ஆனால் இதற்குள்ளிருக்கும் ஜபல்டுரூஸ், லடாகிய ஜசீயா, என்ற 3 நாடுகளுக்கும் அதற்குள் சுதந்திரம் இல்லை.

விரோதியால் ஒருவரும் இந்த தேசங்களை பிடிக்கும் வரை இந்த ஜனங்களை, தங்களுடைய சுயேச்சையைப்பற்றியும் சுதந்திரத்தைப்பற்றியும் பேசிக்கொண்டிருக்கும்படி தாராளமாக விட்டுவிடலாம்.

பிரெஞ்சு அரசாங்கத்தார் தங்கள் மாண்டேட்டில் குளறி வைத்திருப்பதைப் பாருங்கள்.

கி. பி. 1919-ல் ஸிரியாவும் மெஸபாடாமியாவைப் போல் ஒரு ஏ. கிளாஸ் மாண்டேட் ஆயிற்று. 1921-ல் நீர்வளம் பொருந்திய ஸிலீஷ்யாவை துருக்கிக்கு கொடுக்கவேண்டியதாயிற்று. 1926-ல் ஒரு பெரிய கலகத்தை ஏற்படுத்தி டமாஸ்கஸின் பேரில் ஒரு குண்டு வீசி அதை நாசம் செய்துவிட்டார்கள். 1939-ல் அலெக்ஸாண்டிரெட்டா என்னும் முக்கியமான துறைமுகத்தையும் துருக்கிக்குக் கொடுத்துவிட்டார்கள். இப்பொழுது சர்வதேச சங்கத்தினின்றும் விலகிக்கொண்டும் விட்டார்கள். இதனல் இந்த தேசத்தில் அணுவளவும் பாத்தியமில்லை. என்ன அனுதாபமான கதை.

**துருக்கியுடன் ஒப்பந்தம்.**—ஒப்பந்தங்கள் சிநேகிதர்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒரு கட்டுப்பாடு என்று எல்லோரும் நினைக்கிறார்கள். ஆனால் ஜெர்மனியுடன் ஒப்பந்தம் செய்திருக்கும் எந்த தேசம் ஹிட்லரைத் தன் சிநேகிதனாகக்கருதுகிறதென்று நினைக்கிறீர்கள். நிச்சயமாக துருக்கியுமில்லை; ருஷ்யாவுமில்லை; அல்லது நாஸி தேசத்தின் பலத்தைக்கண்டு நடுநடுங்கிக்கொண்டிருக்கும் இவைகளைப்போல மற்ற தேசங்களுமில்லை. ஒப்பந்தங்கள் நெருக்கடி சமயத்தில் கொஞ்சம் மூச்சு விடுவதற்கு நேரம் கிடைப்பதற்காகவும், நெருக்கடி தீர்ந்தவுடன் கிழித்தெறிவதற்காகவுமே. சிநேகபாவ ஒப்பந்தமாயிருந்தாலும் சரி, வியாபார ஒப்பந்தமாயிருந்தாலும் சரி, நமக்கு இதில் ஒரு கெடுதலுமில்லை. ஆனாலும் இம்மாதிரி ஏமாருகிறவர்கள் தைரியமாக நின்று நேசதேசத்துடன் சேர்ந்தால் நல்லது என்று நமக்குத் தோன்றுகிறது.

**குறிப்பு.**—இது எழுதி ஒரு மணி நேரத்திற்குள் ருஷ்யாமீது ஜெர்மனி படையெடுத்த விவரம் கிடைத்துவிட்டது. நிச்சயமாக 10 அநேகமாக 15 வருஷங்களுக்கு ஊர்ஜிதமாக செய்யப்பட்ட ஹிட்லர் ஸ்டாலின் ஒப்பந்தம் 1939 ஜுலை முதல் 22 மாதங்கள்தான் ஓடியிருக்கிறது. துருக்கியும் அநேகமாக சூழப்பட்டுப்போயும், சண்டைக்குத் தயாரில்லாமலும் இருந்ததால் வேறு என்ன செய்திருக்கக்கூடும் என்பதைச் சொல்லுவது சிரமந்தான். இப்பொழுதோ ருஷ்யாவையும், துருக்கி அச்சுடன் சேரப்போகிறதென்று (இது ஒரு நாளும் இல்லை), முடிக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஸ்டாலின் பேசாமல் கோதுமை, எண்ணெய் வகையரா சாமான்களை ஜெர்மனியிடம் கொடுத்துவிடவேண்டியது. இல்லாவிட்டால், ஜெர்மனி துருக்கி மூலம் பாகு எண்ணெய் கிணறுகளுக்குப் போய்விடும்.

இதாலி தேசத்துப் பத்திரிகைகள்தான் முதன் முதலில் கிளப்பிவிட்டு ஜெர்மனியிடத்திலிருந்து வசவும் வாங்கிக்கொண்டது. ஆனால் இவைகள் ஜெர்மனியால்தான் உண்டாக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. ஸ்டாலினும் தன்னை சர்வாதிகாரியாகச் செய்த ஜனங்களுடைய மனதிற்கு எவ்வளவு மாறாக நடக்கமுடியும் என்பதுதான் முக்கிய பிரச்னை.

இந்நிலைமையில் மாஸ்கோ, அங்காரா, விஷி, மாட்டிரிட் முதலிய ஊர்களில் பயமுறுத்தல், லஞ்சம் கொடுத்தல் முதலிய பழைய ஆபாசக் கதைகள். ஆனால், எல்லா இடத்திலும் நடந்துவரும் "பேச்சுகளில்" பெரிய சண்டை ஆரம்பிப்பதற்குமுன் நமக்கு முக்கியமாக தெரியவேண்டியதென்னவென்றால், மிஸ்டர் சர்ச்சிலிடமிருந்து பிரஸிடெண்டு ரூஸ்வெல்டுக்குக் கொண்டுபோன கடிதத்தில் கண்டிருக்கும் விஷயங்கள்தான். இதுமட்டும் நமக்கு நன்றாகத் தெரியும். ஹிட்லரையும் நாஸி கொள்கைகளைப்பற்றியும் மிஸ்டர் ரூஸ்வெல்டின் அபிப்பிராயம் கடிதம் பூரா விவரங்கள் அடங்கியது, மிகவும் ரகஸியமானது. செங்கடலிலாவது, பிரெஞ்சு வட ஆபிரிக்காவிலாவது, அமெரிக்காவை எதிர்க்காமல் இஷ்டப்படி கொள்ளையடிக்கமுடியாது என்பதுதான்.

# புதுக்கோட்டையிலுள்ளவர்கள் மறுபடியும் முன்வருகிறார்கள்.

நமது மன்னர் அவர்கள் ஸமக்ஷத்தில் குதூகலத்துடன், இந்த வாரத்தில் டவுன் ஹாலில் அதிர்ஷ்டச் சீட்டு குலுக்கப்பட்ட வைபவத்துடன் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தின் அதிர்ஷ்டச் சீட்டு முடிவடைந்ததற்கு, நம்முடைய சகோதரர்களான புதுக்கோட்டை யுத்தநிதி கமிட்டியார்களுக்கு நம்முடைய மனமார்ந்த சந்தோஷத்தைத் தெரிவிக்கிறோம். அவர்கள் எவ்வகையிலும் வாஸ்தவமாக வேலை செய்யக்கூடிய ஒரு கமிட்டியார்கள். நமது ஸமஸ்தானத்துக்கு அடுத்துள்ள நாடுகளில் அநேக பெரிய அதிர்ஷ்டச் சீட்டுகள் நடைபெற்று வரும்பொழுது, மூன்று மாதங்களுக்கு அதிகமான அவகாசத்தில் 1,12,000 ரூபாய்கள் பொறுமானமுள்ள ஒரு ரூபாய் டிக்கெட்டுகள் விற்பனையாகியிருக்கிறதென்பது கமிட்டியாரின் ஏற்பாட்டின் திறமையையும், பொறுமையையும் புதுக்கோட்டையிலுள்ளவர்களை, விசேஷமாக நகரத்தார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு தூரம் தங்கள் பொறுப்பை அறிந்திருக்கிறார்களென்பதையும் விளக்கிக்காட்டுகிறது. இப்பொழுது இந்தக் கமிட்டியார்கள் கொடுத்த 60,000 ரூபாய்களும் சேர்த்து ஸமஸ்தானத்திலிருந்து யுத்தத்துக்கு ஏறக்குறைய 3 லக்ஷம் ரூபாய்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் இது முடிவடையப்போவதில்லை. ஏனென்றால், நமது மன்னர் தேச மக்களுக்கு இந்த நல்ல வேலையைப் பின்னும் நடத்தும்படிக்கும், நாம் இத்துடன் நிறுத்திவிடக்கூடாதென்றும், நாம் நிறுத்தவும் மாட்டோமென்றும் விடுத்த விசேஷக் கட்டளையை எல்லோரும் அங்கீகாரம் செய்து இருக்கிறார்கள்.

நமது யுத்த அறிக்கை நிலயத்திலுள்ளவர்களும், நமது யுத்தக் கமிட்டியார்கள் அவர்கள் சேமிக்கப்போகும் 1-லக்ஷ ரூபாயில் 100-ல் 10-பங்கு உள்ள தொகையை நமக்குக் கொடுத்துவிடுவதாகத் தீர்மானம் செய்தபொழுது சந்தோஷமடைந்தோம். இப்பொழுது அவர்கள் 10,000 ரூபாய்களை நமக்கு நன்கொடை அளித்துவிட்டார்கள் என்பதில் அதிக சந்தோஷமடைகிறோம். நம்முடைய சிநேகிதர்கள் நமக்கு அளித்த நன்கொடையை நாமெல்லோரும் விரும்பும் ஒரு அருந்தொழிலில் சரியான முறையில் உபயோகப்படும்படி செய்ய நம்மால் இயன்ற அளவு பிரயத்தனம் செய்வோம். உலகத்திலுள்ள மனித வர்க்கத்துக்கே அபாயம் விளைவிக்கக்கூடிய இந்த பயங்கரமான அபாயத்தை உடன் காலத்திலேயே ஒழித்துவிடுவதுதான் நம்முடைய பிரயத்தனம்.

# விமான எதிர்ப்பும் போஜன சாலைகளின் நிலையும்.

## மின்னல் எதிர்ப்பினால் ஏற்பட்ட சொந்த அனுபவங்கள்.

இந்தப் பத்திரிகைக்கு ஏற்கனவே சமாசாரங்கள் அனுப்பியிருக்கும் ஒரு நெருப்பு அணைக்கும் முகாமிலுள்ள சீமாட்டியானவள், லண்டனிலிருந்து எழுதிய கடிதத்தின் சில முக்கியமான பாகங்கள்.

லண்டனில் பின்னும் (2) மின்னல் எதிர்ப்புகள் ஏற்பட்டன. ஒன்று பாரிஸ் ஹோட்டலிலிருந்த ஒரு பாண்டுதலைவர், பொது மானேஜர், பொல்ஸன், பாண்டிலுள்ள அநேகர், இவர்களுக்கும் மற்ற அநேக இடங்களிலும் உயிர்ச் சேதங்களை விளைவித்ததுமல்லாமல், ஸ்டான்ஹோப் நந்தவனத்தையும் பாதித்தது. 5 வெடி குண்டுகள் போடப்பட்டன. எங்கள் வீட்டுக்குப் பின்பக்கத்திலுள்ள கிளார்வில் தோட்டத்தில் முதல் குண்டு விழுந்தது. இரண்டாவது ஸ்டான் ஹோப் தோட்டங்களிலுள்ள 39, 40-ம் நம்பர் வீடுகளின் பேரில் விழுந்து பின் சுவருகள் முழுவதும் இடிந்துபோயின. மற்றும் இரண்டு கிளாஸ்டர் ரஸ்தாவின் இரு ஓரங்களிலும், ஐந்தாவது ஆஷ்பர்ன் ஸ்தலத்திலும் விழுந்தன. 43-ம் நம்பர் வீடு அதிருஷ்டவசமாய் தப்பியது. குண்டுகள் கட்டடத்திற்கு ரொம்பவும் சமீபத்தில் விழுந்தபோதிலும், சாப்பாட்டு அறை, ஓய்வு அறை, ஸ்நான அறை, கக்கூஸ் இவைகளைத் தவிர மற்ற ஜன்னல்கள் மட்டும் நொறுங்கிப்போயின. ஸ்நான அறையின் கூரையிலுள்ள ஓடுகள் சிதறிப்போயின. மேன்கட்டிடம் மிகவும் சேதமாகிவிட்டதால் அங்குள்ள மின்சார விளக்குகளை நாங்கள் உபயோகிக்கமுடியவில்லை. பெரிய வெடிப்பு ஒன்று ஏற்பட்டுவிட்டது. நான் ஸ்நானம் செய்து கொண்டிருக்கும்பொழுது ஒரு நாள் என் தலையில் கட்டிடம் விழுந்து விடுமோ என்று பயப்படுகிறேன்.

பத்து நாட்களாக, ஆடை தரிக்கிறதும், அவிழ்க்கிறதுமாக யிருந்து என்னுடைய அறையில் ஜன்னல்களில் ஒரு சதுர அங்குலமுள்ள கண்ணாடிகூட இல்லாமல் படுத்துத்தூங்கினேன். குளிர் மிகவும் அதிகமாகயிருந்தது. வடகிழக்கேயிருந்து புயல் காற்று மணிக்கு 90-மைல் வேகத்துடன் அடித்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயம் மழையோ அல்லது பனிமாரியோ பெய்யாதிருந்தது பெரிய அனுகூலம். என் தாயாரிடம் வெடிகுண்டுகள் எவ்வளவு சமீபத்திலிருக்கின்றன என்று நான் சொல்லவில்லை. நேற்றயதினம் அந்த இடத்தின்வழியாகச் சென்றபொழுது, அவள் அவைகளை உற்று கவனிக்காத வண்ணம் அவளுடன் சம்பாஷணை செய்து வந்தேன்.

வெடிகுண்டுகள் விழுந்தபொழுது நான் அவ்விடம் இல்லாமலிருந்தேனே யென்று சந்தோஷப்படுகிறேன். இரவு எட்டு மணியிருக்கும். அவர்கள் ஓய்வு அறையில் இருந்தார்கள். கதவுகளும் ஜன்னல் கதவுகளும் திடீரென்று திறந்தன. புகைப்போக்கிவழியாக வந்த கரும்புகை அறைமுழுவதும் பறவியது. சிலர் ஆபீஸ்

அரையிலிருந்தார்கள். அவர்கள் அரையின் ஜன்னல்கள் உடைந்தபொழுது அவர்கள் மேஜைகளுக்குக்கீழ் பதுங்கிக்கொண்டார்கள்.

நான் நெருப்பு அணைக்கும் ஜாகாவிலிருந்தேன். என்னுடைய சிநேகிதியும் நானும் ஒரு நாட்டியத்திற்குச்செல்ல அனுமதி பெற்றிருந்தோம். சண்டை ஆரம்பித்ததற்குப்பிறகு, வேலைபார்க்கும் பொழுது விசேஷமான ரஜாவுக்கு நாங்கள் கேட்டது இப்பொழுதுதான். நாட்டியம் சமீபத்தில் நடப்பதால் நாங்கள் உடுப்புகளைப் போட்டுக்கொண்டே செல்லக்கூடுமென்றும், ஏதாவது விபத்து நேரிட்டால் ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்துவிடக்கூடுமென்ற காரணத்தினால் தான் எங்களுக்கு உத்தரவு அளிக்கப்பட்டது. அதிருஷ்டவசமாக, அதுதான் லண்டன் பேரில் முதலில் ஏற்பட்ட மின்னல் எதிர்ப்பு. நாங்கள் எங்கள் கூட்டாளிகளைத்தனியாய் விட்டுவிட்டு அதிவேகமாய் ஓடிவந்து காலை 3 மணிவரையில் கடுமையாக வேலை செய்தோம்.

43-வது நம்பர் வீட்டின் நிலைமை சொல்லமுடியாதது. எங்குபார்த்தாலும் கண்ணாடித்தூள்களும் சுண்ணாம்புப்பூச்சுகளும் இடிந்து கிடக்கின்றன. வெகு நாட்கள் வரையில் ஒவ்வொரு இடத்திலும் கண்ணாடித்தூள்கள் இருப்பதைக் கண்டேன்.

மேலே சொன்ன விமான எதிர்ப்புக்குப்பிறகு, லண்டன் பேரில் மற்றொரு மின்னல் எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் இதற்கு சமீபத்தில் இல்லை. ஆகிலும் எங்களுடைய எல்லா கருவிகளும் ஆள்களும் தீப்பிடித்த இடங்களில் அநேககாலம் வேலைசெய்ய வேண்டியதாயிற்று. ஆகிலும் நாங்கள் அநேக நாட்டியங்களில் ஈடுபட்டோம். நாட்டியம் ஆரம்பித்தவுடன் காலத்திலேயே நிறுத்திவிடவேண்டிய அபாயத்துக்குள்பட்டுத்தான் அவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இம்மாதிரி சம்பவம் ஒருபொழுதும் நடைபெறவில்லை. ஆகையால் நாங்கள் அதிருஷ்டசாலிகள் என்றே நினைக்கிறோம். இவ்விடத்தில் இரண்டு நாட்டியங்கள் நடந்தன. நேற்றிரவு நான் வேலைசெய்த ஒரு முகாமில் நடந்த ஒரு நல்ல ஆட்டத்திற்குப் போனேன். நான் அங்கே வசித்தபொழுது ஒரு குடிசையில் வசித்து வந்தேன். இப்பொழுது அவர்கள் அழகான மாளிகைகளில் வசிக்கிறார்கள். அங்கே ரொம்பவும் நல்ல கூட்டம் சேர்ந்திருந்தது. இங்கிருந்து நாங்களிருவரும், சட்டப்படி கண்டிப்பாய் தடைபட்டிருந்தாலும் நெருப்பு அணைக்கும் வண்டியிலேயேதான் அங்கு சென்றோம். எங்குபார்த்தாலும் வெளிச்ச மறைப்பு ஏற்பட்டிருந்ததால் எங்களுக்கு ஒன்றும் பார்க்கமுடியவில்லை. பிரயாணம் ரொம்பவும் ஆச்சரியமானது. அதன் ஜனங்களுடன் நாங்களும் சென்றதால் நெருக்கடியுமிருந்தது. நான் எஞ்சினை ஓட்டும்படி நேர்ந்தது. யுத்தம் முடிவடைவதற்குள் இந்த வேலையும் பார்க்கும்படி நேரிடும். தீப்பிடித்த இடத்திற்கல்ல. வண்டிக்கு எண்ணெய் ஊத்துவதற்கும் அல்லது இதர விஷயங்களுக்குமட்டும் தான். இப்படி நேர்ந்தால் உங்களுக்கு அறிவிக்கிறேன். மோட்டார் ஓட்டுகிறவர்களில் ஒருவர் என்னுடைய முக்கியமான சிநேகிதர் நினைத்தமாத்திரத்தில் அவனை வேறு ஒரு முகாமுக்கு மாற்றிவிட்டால் நான் மறுபடியும் வேலைசெய்ய வேண்டித்தான் வரும்.

மற்றொரு கஷ்டமான நிலைமை என்னவென்றால், எங்கள் வீட்டுக்குச் சமீபத்தில் விமான எதிர்ப்புக்குப்பிறகு ஏற்படும் சத்தம்தான். முதலாவதாக, வெகு நாட்கள் வரையில் ரஸ்தாக்களிலும் நடைபாதைகளிலும் கிடக்கும் கண்ணாடித்தூள்களையும் கட்டடத்தூள்களையும் மண்வெட்டிகளைக்கொண்டு அள்ளி குப்பை வண்டிகளில் எறியும் சப்தம் அதிகமாகயிருக்கும். காதைப்பிளக்கக்கூடிய இதைப்போன்ற சப்தத்தை இதுவரையில் கேட்டிருக்க மாட்டீர்கள். 43-ம் நம்பர் வீட்டிலுள்ள ஜன்னல்களில் உடன்கால உதவிக்காக ஏற்படுத்தப்பட்ட வேலைகளில் ஒன்றாகியது அடியிலுள்ள கண்ணாடிச்சட்டத்தில் ஒரு கோதுமை வர்ணமுள்ள பலகையும் அதற்குமேலாக வெள்ளையான சாமானினால் ஒரு பலகையும் போடப்பட்டிருக்கிறது. இது வழியாக சிறிது வெளிச்சம் உள்ளேவருகிறது. இவைகள் வழியாக ஒருவரும் வெளியே பார்க்கமுடியாது. இவைவழியாக குளிர்ந்த காற்றுகள் வருகின்றன. ஆனால் நல்ல காற்று வருகிறதில்லை.

---

# 'பெரிய' ஜெர்மனிக்கு அடுத்தாற் போல்.

ஜேம்ஸ் லாண்ட்ஸ்டேல் ஹாட்ஸனுடைய பதிப்பு.

ஹாட்ஸன் ஒரு ஆங்கில நூலாசிரியர். பத்திரிகை நிருபர். சிலதினங்களுக்குமுன் 'டோவர்' சென்றிருந்தார். எதிரியின் பிரதேசத்துக்கு மற்ற பிரிடிஷ் நகரங்களைவிட, சமீபத்திலுள்ளதும், பிரெஞ்சுக் கடற்கரையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஜெர்மன் பீரங்கிகளின் எதிர்பிக்குட்ப்பட்டதுமான 'டோவர்' நகரம், மிகவும் ப்ராசீனமானது.

இதன் முகப்பிலிருந்து ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருப்பதால் 'பெரிய ரிச்' என்றுசொல்ல இலக்குள்ளதான 'கலே' யும்' புலாயி'னும் நாம் பார்க்க முடியும்.

பீரங்கிப்படை உத்தியோகஸ்தருக்குள்ள தூரதிருஷ்டி கண்ணாடியைக் கொண்டு 'கலே'யின் மணிக்கூண்டு கடியாரத்தில் மணி பார்க்கமுடியும். நான் அங்கு சென்றதினம் பிரெஞ்சுக் கடற்கரைப் பிராந்தியம் தெளிவாக தெரிந்தது. 20-மைல் தூரமாகயில்லாமல் 4, 5-மைல் தூரத்திலேயே இருப்பதாகத் தெரிந்தது. மத்தியிலுள்ள கடலும் தெளிவாக இருந்தது. யுத்தம் நடப்பதாகவே தெரியக்கூடவில்லை. கடலில் சில பிரிடிஷ் கப்பல்கள் மெதுவாக அனாயாசமாகச் சென்றுகொண்டிருந்தன. மேலே தற்காப்பு பலூன்கள் பிரகாசித்தன. காற்று திசைமாறின போதெல்லாம் நங்கூரம் பாய்ச்சின பெரியகப்பல்கள் போல் மெதுவாக திரும்பிக்கொடுத்தன. எங்கும் நிசப்தமாகவே இருந்தது. இவ்விதம் பலமணி நேரம் நிசப்தம் உலாவியது. ஒரு வருஷத்துக்குமுன் 'மாஜிநாட்' அரண் எதிர்ப்புக்குமுன், இவ்விதந்தான் இருந்தது. வாரம்பூராவும் இவ்விதமே பல மணி நேரம் நிசப்தமாயும் முக்கியமாய் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஒவ்

வொரு சமயம் வேறு சில தினங்களி லும் சரியாக பகல் $2\frac{1}{2}$மணிக்கு வெடி குண்டு ஓசைகளுடனும் துலங்குகிறது. திடீரென்று எச்சரிப்பின்றி, குண்டு செங்குத்தாகவே 85டிகிரி கோணத்தில் விழுந்து வெடிக்கும். உடனே பீரங்கி யுத்தம் நடப்பதாக போலீஸால் ஜனங் களுக்கு தாக்கல் கொடுக்கப்படுகிறது. ஒரு குண்டு விழுந்தபிறகு மறு குண்டு வர 7 நிமிஷம் பிடிக்கிறது. சில சம யம் சில குண்டுகளே வருகின்றன. ஒரு குண்டு விழுந்ததும் 1, 2 என்று 90 வரை எண்ணினால் 90 என்று எண்ணின வுடன் அது வெடிக்கும்.

மற்றபிரிடிஷ் பிரஜைகளைப் போல் நூற்றுக்கணக்கான வெடிகுண்டு எதிர் ப்புகளைப் பார்த்திருக்கிறேன். அது சமயம் குண்டு வருமுன் விமான சப்த மோ, எதிர்ப்பைப்பற்றி எச்சரிப்பு ஊதலோ கேட்கும். ஆனால் டோவரில் இது கிடையாது. குண்டுவந்த பிறகு தான் தகவலே தெரியும். இதனால் ஜனங்களுக்கு பெரிதும்நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கலாம். ஆனால் ஆயிரக்கணக்கான பேர்கள் அங்கு வசிக்கின்றனர். ஸ்திரீகள் குழ ந்தைகளை தள்ளுவண்டிகளில் தெரு வில் தள்ளிச் செல்லுகிறார்கள். யுவாக் கள் கடைகளில் எப்போதும்போல் சாமான்கள் வாங்குகிறார்கள். பஸ்கள் எப்போதும் போல் ஓடுகின்றன. ரயில் வண்டிகளும் டயம்படி செல்லுகின்றன. சங்கீத கூடங்கள் வழக்கப்படி நடக் கின்றன, மாதாகோவில்களில் தினப் படி பிரார்த்தனைகள் நடக்கின்றன. இது ஆபூர்வமாகத்தான் தோன்றும். இது ஏன்? எதிரிகள் நம் தேசத்தில் புக நினைத்தால் 'டோவர்' தான் மார்க் கம். 'டோவரைச் சுற்றி பீரங்கி குண்டு வீழ்த்துவதனால் அங்கே படையை இறக்கக்கூடும். இதை உத்தேசித்தே மற்ற பிராந்தியங்களைப்போல் இது சின்னாபின்னமாக்கப்பட வில்லை. லிவர் பூல் லண்டன் இவை மாதிரி இங்கு சேதம் இல்லை. ஒரு பிரபலஸ்தர் என்னிடம் சொன்னார், "மற்ற நகரத் தோடு ஒப்பிட்டால் டோவரில் எல் லாம் பத்திரமாகவே இருக்கிறது". போலீஸ் உத்தியோகஸ்தரின் மனைவி அவரிடம் சொன்னதாவது "நான் சென்றிருந்த இடங்களில் இதுபோல் சேதமில்லாத இடத்தைக் காட்டுங்கள் அங்கு போகிறேன்" அவரால் குறிக்க முடியவில்லை. ஜனங்களின் தைரியத்தை தவிர இவ்விதம் அவர்கள் இங்கே வசிப் பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஜனங்கள் அபாய சமயத்தில் தங்க நல்ல வசதிகள் இருக்கிறது. அவ்வித இடங்கள் பலப மலைகளில் குடையப் பட்டவை. சிலவைகள் 60 அடி ஆழத் திலும் சிலது 150 அடி ஆழத்திலும் மலைகளில் குடையப்பட்டிருக்கின்றன. இவ்வளவு கனமான பலப பாறையை உடைப்பது கஷ்டம். இவைகளில் டோவரிலுள்ள சகலரும் தங்கக்கூடும் எனினும் இன்னும் பல சுரங்கங்கள் தோண்டப்படுகின்றன. இவைகளில் எலெக்டிரிக் வசதிகள் இருக்கின்றன. ஒன்று $1\frac{1}{2}$ மைல் நீளம் உள்ளது. இவை கள் எல்லாம் புதியவை அல்ல. நெபோ லியன் காலத்துப் பிரெஞ்சு யுத்த கைதிகள் தோண்டியது பல.

நான் கோட்டையில் ராணுவத்தின் விருந்தாளியாக தங்கியிருந்தேன். நெல் ஸன் காலத்து பீரங்கிகள் கோட்டை வாசலில் வைக்கப்பட்டிருக்கின்றன. பழைய காலத்து கத்தி கேடயங்களும் கவசங்களும் சுவர்களில் தொங்கவிடப்

பட்டிருக்கின்றன. 30, 40 அடி நீள மான பழைய மேஜையில் உட்கார்ந்து சாப்பிட்டோம். ஆனால் நவீன வாழ்வை காட்டும் சின்னங்களும் தென்பட்டன. "தங்கள் உணவுடன் வருவதால் இருந் தாலொழிய மற்ற உத்தியோகஸ்தர்கள் சாப்பிடக்கூடாது" என்று ஒரு நோட் டீஸ் ஒட்டியிருந்தது. நான் காலை போஜனத்துக்குச்சென்று கொண்டிருக் கையில் குண்டுகளின் சப்தம் தற்கால நிகழ்ச்சிகளை வற்புறுத்தியது. நம்மு டைய தற்காப்பு பலூன்களில் 3-வது பற்றிக்கொண்டிருப்பதை வெளியில் வந்தவுடன் பார்த்தேன். மற்ற இரண்டு பலூன்கள் இருந்த இடத்தில் ஒரே புகை ஆகாயமளாவி இருந்தது. திடீ ரென்று தோன்றிய எதிரி விமானம் இவைகளை சுட்டுவிட்டு ஓடிவிட்டது. பார்ப்பதற்கு பல வர்ணமாக இருந்தது. இது சகஜமான நடப்பேயாம். ஒவ் வோர் சமயம் இவ்வித நடவடிக்கை களில் எதிரிகளுக்கு ஏராள சேதம் உண்டு. ஒருதபா 11 விமானங்கள் நாசம் செய்யப்பட்டன. புது பலூன்களை திரும்ப பறக்கவிடுவது 1 மணி நேரம் தான்பிடிக்கும். ஆனால் இதில் தொந் தரவு ஜாஸ்தி. கம்பி முறுக்கும்போது கஷ்டம் அதிகம். மேலும் அவைகள் ஸ்திரப்பட்டதல்ல. சில அறுத்துக் கொண்டு பறந்துவிடும். ஒரு சமயம் 2 பலூன்கள்தான் பறக்கவிட்ட இடத் தில் 3-வது ஒன்று வந்து சேர்ந்து கொண்டது. அதன் கம்பி நழுவினது தான் காரணம். ஒரு சமயம் ஒரு பலூன் கடல் பக்கம் பறந்துவிட்டது. இது கவனக் குறைவால் ஏற்பட்டதென் று காவலாளிகள் பேரில் விசாரணை நடந்தது. விசாரணை நடக்கும்போதே அந்த பலூன் திரும்ப தன் இடத்துக்கே வந்துவிட்டது. எல்லாருக்கும் வியப் பை உண்டாக்கிவிட்டது.

பலூன்களின் அபூர்வ நடவடிக் கைகளைத் தோற்கடிக்கின்றது குண்டு களின் வேடிக்கைகள். ஒரு சமயம் ஒரு வெடிகுண்டு ஒரு ஸ்திரீயின் பாத ரக்ஷைகளை மட்டும் அடித்துக்கொண்டு போய் விட்டது. அவளுக்குக் காயம் கூடக்கிடையாது. ஒரு சமயம் ஒரு குண்டு ஒரு மனிதனின் கால் சரா யை மட்டும் கொளுத்தி விட்டது. அவனுக்கு வேறு தீங்கு ஏற்படவில்லை. சிறிப்பும் அழுகையும் கலந்து ஏற் படுகிறது. நமது பீரங்கிகளும் எதிரிக் குத்தக்க பதில் அளிக்கின்றன. சிரம மின்றி 1 டன் கனமுள்ள பெரிய குண்டுகளை, நாம் கல் எறிவது போல அவ்வளவு சுலபமாக 'கலே'யில் குறி தவராமல் விழும்படி எறிகின்றன. இவைகளுக்கு பீரங்கிப்படையினர் விசித்திர பேர்கள் இட்டிருக்கிறார்கள். 'இறை—விளக்கு—பவன்' 'சமாதானக் காரன்''வின்னி'என்றுபலவிதபெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஹிட் லரின் கோஷ்டியினருக்கு தக்க மரியா தை காட்டும் இன்னும் பல சாதனங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளை குறிக்க இடமில்லை.

ஆனால் விமானங்களிலிருந்து சமு த்திரத்தில் குதித்துவிடும் விமானிகளை இழுத்து வருபர்களைப் பற்றிக் கூறக் கூடும். காலைமுதல் மாலைவரையில் இவர்கள் படகுகளுடன் தயாராய் இருக்கின்றனர். விமானி நீரில் விழு கிறான். அங்கு படகை செலுத்திப் போய் இவர்களை படகில் ஏற்றிவருகி றார்கள். பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த அதே ஒருவிமானியை 3 தடவை கடலிலிருந்து காப்பாற்றியிருக்கிறார்

கள். வேறு ஒரு விமானியை இரண்டு தடவை காப்பாற்றியும் சில தினங்களுக்கு முன் அவன் இறந்தே விழுந்திருந்தான்.

கூடிய சீக்கிரத்தில் இவர்களுக்கு வேலை அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. மறுபடியும் ஆகாயத்தில் சுழல் சுழலாக நெருப்பு எறிவதின் மூலம் விமானப் போர் நடப்பது தெரியவரும். இப்போது நமது விமானிகள் தாங்கள் அணிந்து கொள்ளும் தற்காப்பு கச்சையில் காத்துஅடித்த ரப்பர் படகு போன்றது உபயோகிக்கின்றனர். அதனால் ஜலத்திலிருந்து இவைகளில் அவர்கள் ஏறிக்கொள்ள முடியும்.

இதர யுத்த அரங்க பிராந்தியங்களைப் போலவே 'டோவரும்' பல வலைகயாய் இருக்கிறது. யுத்தப் படம் எழுதும் ஒரு நண்பர் 'எல்லாம் சாந்தமாயிருப்பதில் எனக்கு ஒரு யுத்த காட்சியும் கிடைக்கவில்லை" என்றார். ஆனால் அடுத்த நிமிஷம் ரணகளம் ஆகியது. இதிலிருந்து 1, 2 மணி நேரத்தில் சாந்தமாயிற்று. சங்கீத கூட்டத்துக்கு போகமுடிந்தது. அங்கே விக்டோரியா காலத்து பயனோ, கார்னட், பிடில் சேர்ந்த பாண்டும், ஸ்திரீ வேஷம் தரித்த புருஷனின் பாட்டும் நடந்தது. அதைக் கேட்டு காக்கி உடுப்பு அணிந்த நமது யுவர்கள் முன் காலத்தவர்கள் போலவே கை கொட்டி ஆனந்தமடைகின்றனர்.

டோவரினுடைய இயற்கையான நிரந்தரமான விஷயம் ஒன்று ஏதோ இருந்தே வருகிறது. சென்ற யுத்தத்தில் டோவரைச் சேர்ந்த ரோந்துப் பட்டாளம் பெயர் பெற்றிருந்தது. தற்போது 'டங்கர்க்கிலும் இந்தப்படை கியாதி அடைந்திருக்கிறது. இந்த துறைமுகத்துக்கு தினேதினம் பல விதமான 360 கப்பல்கள் வந்து போயின. சென்ற யுத்த காலத்திலும் டங்கர்க் சமயமும் எந்த ஜனங்கள் இங்கு வசித்தார்களோ அவர்களே இப்போதும் இருக்கின்றனர். ஒரு நாள் ஒரு வியாபாரி என்னிடம் "எது வந்தாலும் நான் இதை விட்டுப்போகேன்" என்றான். எப்போது அடுத்த குண்டு விழும் என்று அவனும் மற்றவர் எவரும் அறிய முடியாது என்றாலும் அவன் அங்கே விட்டுப் போகவில்லை. எல்லோரும் இவ்வித ஹிருதயம் உள்ளவர் என்று சொல்லவில்லை. ஆனால் ஜனங்களில் பெரும் பாகம் இப்படிப் பட்டவர்களே. எதிரிகளுக்கு இடம் கொடுக்காதவர்கள். ஹிட்லர் இங்கு வருவானாகில் அவனுக்கு தக்க பதில் இங்கே கிடைக்கும்.

---

## மனிதர்களைத் தீனிப்பன்றிகளாக மாற்றுதல்.

## நாளதுவரை ஸர்ஸியின் மந்திரக்கோல் செய்யும் வேலை.

பிரிட்டனைப்பற்றி மிகவும் அவதூறாகவும், இழிவாகவும் கடல் தளபதி டார்லான் சொல்லிக்கொண்டுவருகிறான். ஒரு வருஷத்திற்கு முந்தி நம்முடன் நேசபாவத்துடனிருந்தவன், ஜெர்மனியுடன் ஒத்துழைப்பதே பிரான்ஸுக்கு மிகவும் மேன்மை என்று சொல்லி ருஜுப்பிக்க எத்தனிக்கிறான். ஜெர்மனி

ஜயித்தால், வாஸ்தவமாய் தங்களுக்கு நன்மைதான் என்று டார்லான் நம்பு கிருன் என்பதே சந்தேகம். மற்ற எந்த பிரெஞ்சுக்காரர்தான் இதை நமபுவான். "டைம்ஸ்" பத்திரிகையைச் சேர்ந்த காலின்கூட் என்பவர் இந்தச் சங்கதிகளைப் பற்றி விவரிக்கிருர்.

## பிரெஞ்சு அபஜயம்.

பிரான்ஸ்பேரில் அன்புவைத்த யாவருக்கும இது சோதனைகாலம். அப்படி அன்புவைத்தவர்கள் பிரெஞ்சுக்காரர்கள் மட்டுமல்ல. பிரான்ஸ் சரணுகதியடைந்து விட்டதே என்று திகைத்தார்கள். பிரெஞ்சு ஏகசக்ராதிபத்தியம் குலைந்ததே என்று பிரமித்தார்கள். ஆனுல், ஜெர்மானியர்களால் அடிபட்ட பிரெஞ்சுக்காரர் கூடிய சீக்கிரத்தில் அபஜயத்தால் ஏற்பட்ட பிரமிப்பு நீங்கிவிடுமென்று நம்பினுர்கள். ஜெர்மானியரின் ஆதிக்கத்தை விலக்கிக்கொள்ள கஸ்பா பிரான்ஸ் ஏறபாடு செய்துகொள்ளும் என்று நினைப்பதே முட்டாள்தனம். கைத்துப்பாக்கி பிரயோக காலங்களில் பிரான்ஸில் கலகங்கள்செய்து ஜயிக்க ஹேதுவிருந்தது. தற்காலம் யந்தர பீரங்கிகளின் வலிமை மிகுநததாகயிருக்கிறது. ஆதலால் முடியாது. ஆனுல், பிரெஞ்சு குடியேற்ற நாடுகளில் ஜெர்மானியர் ஆதிக்கம் ஏற்படவில்லை, அவர்களும், அவைகளில் திடீரென்று வேகமாய்ப் பாய்ந்து ஆக்கிரமிக்க சந்தர்ப்பம் இல்லை. ஆதலால் அந்த நாடுகள் ஜெர்மானிய விரோதிகளுக்கு இடம் கொடுக்கமாட்டார்கள், அவர்களுடன் ஒத்துழைக்க மறுப்பார்கள் ஒருக்கால் பிரிடிஷாருடன் பகிரஙகமாய் ஒத்துழைக்க முன்வராவிட்டாலும், தங்கள்பேரில் எதிரிதொடுக்கும் வேலைகளில் தடஙகல் ஏற்படும்படி செய்வார்கள். இப்படி எல்லாம் நாம் யாவரும் நம்பியிருந்தோம். நம்முடன் குடியேற்ற நாடுகள் ஒத்துழைப்பார்கள் என்று நம்பியதற்கு முழுமாறுக, விரோதி ஜெர்மானியர்களுடன் ஒத்துழைப்பு காலக்கிரமத்தில் ஜாஸ்தியானதைக் கண்கூடாகப் பார்க்கிறேம்.

## கொடுமையால் மந்திரக்கோல்.

இம்மாதிரி ஜெர்மனியின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதென்ற நோக்கம் பிரெஞ்சு அதிகார வர்க்கத்தினர்களிடம்தான் காணப்படுகிறதென்ற சஙகதியை உங்கள் மனதிலிருந்து அகலும்படி விட்டுவிடாதீர்கள். பிரெஞ்சுக்காரர்கள் தங்களுக்கு அதோகதியாக ஏற்பட்ட சரணுகதியானது சிலரால் வேணுமென்றே கொண்டுவரப்பட்டதென்று தெரிந்துகொண்டால், அடஙகாக் கோபமடைவார்கள் என்பதற்கு போதுமான ரஹஸ்யங்களிருக்கின்றன. அந்தச் சங்கதி மட்டில் அவர்களைத் தெரிந்துகொள்ளாவணணம் செய்யப்படுகிறது

ஜெர்மானியர்கள், பிரெஞ்சுக்காரர்களுக்குக் காட்டும் சலுகைகளைப்பற்றி பிரமாதமாக எடுத்துரைக்கப்படுகிறது; புதிது புதிதாக பிரெஞ்சுக்காரர்கள் மேல் ஜெர்மானியர்கள் சுமத்தும் சரணுகதி விஷயங்கள் மறைக்கப்படுகின்றன. பிரெஞ்சு பாமர ஜனங்களுக்கோ ஜெர்மனியுடன் ஒத்துழைப்பது என்பதே பிடிக்காது. இதற்கு மாற்றுக்கொடுப்பதுபோல், பிரெஞ்சு அதிகார வர்க்கத்தினர் பிரிடிஷாரைப்பற்றி பொய்ப் பிரசாரங்களை வெள்ளமபோல கொட்டுகிருர்கள். இப்படி

அதிகார வர்க்கத்தினருக்குக்கூட ஏற்பட்ட மனப்பான்மை ஆச்சரியமாயிருக்கிறது. அந்த மனப்பான்மையைப்பற்றி சிலதுகளைத் துலக்குகிறேன். முன் நடந்த சங்கதிகளை எடுத்துக்காட்டவேணும். அப்படிக் காட்டினால்தான் இந்த ஆச்சரிய சம்பவங்களின் மூல காரணங்கள் புலப்படும்.

## கொஞ்சம் சரித்திரம்.

புத்தி நுட்பமானவும், தைரியம் படைத்தவுமான தேசத்தவர்கள் திடீரென்று, மழுங்கிய மூளையுடையவர்களாய் மாறிவிடுவார்களா? அல்லது கோழையாகி விடுவார்களா? ஒரு சங்கதி உங்களுக்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்: சமீப வருஷங்களில் பிரான்ஸ் தேசத்தில் ஜனநாயக தத்துவம் நன்ருய் பிரகாசிக்காத வண்ணம் சில விஷயங்கள் நடந்திருக்கின்றன. துடர்ச்சியாக பிரெஞ்சுக்காரர்களுக்கு பல பலஹீனமானவும், அடிக்கடி மறைந்துமாறும் நிர்வாகங்களை அனுபவிக்கும் விதி ஏற்பட்டது. அவ்வாறே அவர்களின் ராஜீய வாதிகளும், ராஜீய வாதங்களும், ரஸத்தப்பான போக்குள்ள வகையாக அமைந்தன. ராஜீயவாதிகள் சங்கியை அபரிமிதம், கக்ஷிப்பிரதிகக்ஷி.

பிரான்ஸில் வழங்கிவந்த ஜனநாயக ஆட்சியின் கோளாருகள்தான் அவைகள். எல்லா ஜனநாயக ஆட்சிக்கும் இம்மாதிரி கோளாருகள் முக்கியமானதாக ஏற்படக் கூடியதல்ல. ஆனால் இந்தக்கோளாருகள் ஏற்பட்டகாலத்தில் நல்ல யோக்யஸ்தர் களுக்குக்கூட ஜனநாயகம் என்றதின்பேரில் ஒருவித மனச்சலிப்பு ஏற்பட்டது. ஏன் சில வழவழத்த நாக்குப்படைத்த ராஜீய வாதிகள் ஜனநாயக ஆட்சியை அறவே போக்கவேண்டுமென்றும் பிறகு க்ஷேமம் ஏற்படுமென்றும் பேசத் துடங்கினார்கள். இந்தக் காரணத்தால்தான் விஷி ஸர்க்கார் மனிதர்களுக்கு, நாஸிக் கொள்கைக்கோ, பாஸிஸ்டு கொள்கைக்கோ எதிர்நோக்கம் ஏற்படவில்லை. ஏன்! நாஸிக் கொள்கைகளை சிலாகித்தார்கள். அந்த நாஸி திட்டம்தான் கிரமமான திட்டம் என்று அபிப்பிராயப்பட்டார்கள். பொது உடைமைக் கொள்கை பரவாவண்ணம் நாஸிகளின் திட்டம் எதிர்த்துக் கோட்டைபோல் நிற்கிறது என்று ஹிட்லர் அடிக்கடி வருஷக்கணக்காய் சொல்லிவந்த பொய்ப் பிரசாரத்தை உண்மை என்று ஏமாறி நம்புகிருர்கள். மொத்தமாய்ப் பார்க்கப் போனல், நாஸி ஜெர்மானியர்களிடம்கூட விஷி அதிகாரவர்க்கத்தினருக்குப் பயமில்லை, தங்கள் தேசத்திலுள்ள இடதுகைப் பொதுஉடமை கக்ஷியினர்களின் பேரில் அத்தனை பயம்.

## ஆங்கிலேயர்கள்பேரில் வைரசிந்தனை.

இந்தப் பிரெஞ்சு தேசத்திய நாஸிக் கொள்கைக்காரர்கள்தான், பிரான்ஸி லுள்ள பிரிடிஷ் விரோதிகளில் முக்கியஸ்தர்கள். ஆனல் அவர்கள் மாதிரி பிரெஞ் சுக்காரர்கள் முழுமையுமல்ல. ஆங்கிலேயர்களின் பேரில் அவர்களுக்கு அவநம் பிக்கை. இத்துடன் பிரெஞ்சு தேசத்தை பிரிடிஷார், சென்ற யுத்தத்திற்குப் பிறகு, இந்த யுத்தம் ஆரம்பிக்கும் வரையில், வேணுமென்றே க்ஷீணிக்கும்படி செய்து விட்டார்கள் என்று ஒரு சாரார் செய்யும் பிரசாரம் சேர்ந்தது. பிரிடன்தான் ஜெர்மானியர்கள் மறுபடி யுத்த சன்னத்தமாகும்படி செய்துவிட்டது என்றும்,

இந்த யுத்தத்தில் தங்களுக்குப் போதுமான உதவி பிரிடிஷார் அளிக்கவில்லையென்றும் அவர்கள் செய்த பிரசாரமும் வேலைசெய்ய ஆரம்பித்தது. தவிரவும் பிரெஞ்சுக் கடற்படையை நாம் யுத்தத்திற்கு லாயக்கில்லாமல் செய்துவிட்டதிலிருந்து சில பிரெஞ்சுக்காரர்களுக்கு நம்பேரில் மனஸ்தாபம்; ஏன் இப்பொழுது ஆங்கிலேயர்கள் ஜயித்தால்தான் என்ன? முந்தி செய்தமாதிரிதான், ஒரு கோழைகாட்டும் சமாதானம். பிறகு, ஜெர்மனியை யுத்த சன்னத்தமாக 2 வருஷத்திற்குள் செய்யும்படி அனுமதிப்பது. இவைகள்தான் ஏற்படப் போகிறது என்று சிலர் நினைக்கிறார்கள்.

இன்னும் சில பிரெஞ்சுக்காரர்கள் "ஜெர்மனியும், இங்கிலாந்தும் போடட்டும் கடும்போர். மடியட்டும் இருவர்களும்; நமக்கு நிர்பயம்; யுத்தத்திற்குப் பிறகு நமது கை வலுத்துவிடும். ஸ்வேச்சாதிக் கொடியை நாட்டிவிடலாம். இருதேசங்களும் பலஹீனப்பட்டுவிடும்" என்று நினைக்கிறார்கள். 1918-ம்வரு முதல் இம்மாதிரி எத்தனையோ ஆசை நினைவுகள் பிரெஞ்சுக்காரர்கள் நினைக்கிறார்கள். அவைகளில் இந்த நினைவும் மிகவும் மோசமானது.

## ஆசை நினைவு.

ஆனால் ஜெர்மானியர்களுடன் ஒத்துழைப்பதென்று சம்மதிக்கும் பிரெஞ்சு பேர்வழிகள், நிச்சயமாய் ஜெர்மனிதான் ஜயிக்கும் என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த தீர்மானத்தினால் மார்ஷல் பிடேன்கூட கடல் தளபதி டார்லான் சொல்லும் யோசனைக்கு இணங்கும்படி ஆகிவிட்டது. மார்ஷல் பிடேனிடம் அமெரிக்கா செய்துகொண்ட முறையீடுகளுக்கு அவர் அடியில்கண்ட விதம் பதிலளித்ததாகச் சொல்லப்படுகிறது. "பிரிடிஷார்கள் பகீரதப் பிரயத்தனங்கள் விமரிசையாகத்தான் செய்கிறார்கள். ஆனால் அவைகள் யாவும் முட்டாள்தனம்" அவர் நடவடிக்கைகளுக்கு சமாதானம் கொட்டைப் பாக்குக்குள் அடங்கியதுபோல் இந்த அவருடைய பதிலில் அடங்கியிருக்கிறது. பிரிடிஷாருக்கு பிடேன் சொல்லுவதாவது "நீங்கள் போடும் யுத்தம் வியக்கும்படி பிரமாதமாகத்தானிருக்கிறது. நான் உங்களை பாராட்டுகிறேன். ஆனால் நீங்கள் தோல்விதான் அடைவீர்கள். ஆதலால்தான், நீங்கள், நான் செய்தபடி சமாதானம் கோராமலிருந்தால் நீங்கள் முட்டாள்கள்தான்."

இவர் சொல்லும் இந்த ஆலோசனை பிரிடிஷாரின் உறுதியான குணம்சங்களை கவனிக்காமல் சொல்லப்பட்டதேயாகும். மற்றவர்கள் தோல்வியடைந்தார்கள். ஆதலால் நாமும் தோல்வியடைவோம் என்று வாதிக்கும் கக்ஷியில் சாரமில்லை. நாம் தோல்வியடைவது நிச்சயம் என்று மார்ஷல் பிடேன் நினைப்பதால்தான், ஜெர்மானியர் கேட்கும் கோரிக்கைகளெல்லாவற்றையும் விட்டுக்கொடுக்கிறார். பிரான்ஸ் உதவி செய்யும் பக்ஷத்தில், ஜயிக்கும் ஜெர்மனி அதற்கு வெகுமதியளிக்குமாம். பிரான்ஸ் ஜெர்மனிக்கு இடராய் நடந்தால், நம்முடையகதிதான் அதற்கும். அடிமையாக நடத்தப்படுவது நிச்சயம். ஏதன்மத்தியில், உதவி செய்தால் பிரான்ஸுக்கு என்ன கிடைக்கும்? முதலில் ஜெர்மனியில் கைதிகளாகயிருக்கும் 15லக்ஷம் பிரெஞ்சுக்காரர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் விடுதலை

யடைவார்கள். ஜெர்மனி கையிலிருக்கும் பயத்தைக்காட்டி அதிரடியாய் பிடுங்கிக்கொள்ளும் அநேக தந்திரங்களில் இந்த விஷயத்தில் கையாளப்படும் முறையானது பிரெஞ்சுக்காரர்களிடம் நல்ல பிரயோஜனம் தரும்படி சக்தி வாய்ந்ததாக யிருக்கிறது. இதை நாம் குறைவுபடுத்த முடியாது. இந்த 15 லக்ஷம் பேர்களும், அனுக்கிரமிப்பு பிரெஞ்சுதேசத்திலுள்ளவர்களுக்கு பந்துக்கள். அண்ணன், தம்பி, புருஷன், மகன் இவர்கள் ஹிட்லர் கையில் சிக்கியிருப்பதை ஒரு பயங்கரமான ஆயுதமாய் பிரயோகிக்கிறான்.

இரண்டாவதாக, பிரெஞ்சு தொழிற்சாலைகளில் கொஞ்சம் வேலைகிடைக்கும்படி பிடேன் செய்திருக்கிறார். இது ஒரு நல்ல பிரதிப்பிரயோஜனம்தான். ஆனால் தொழிற்சாலையில் செய்யப்படும் வேலை பிரான்ஸுக்கு பயனளிப்பதில்லை. ஜெர்மனிக்குத்தான் சாதகமாகயிருக்கின்றது. பிரெஞ்சு டவுன்களிலும், நகரங்களிலும் வேலையில்லாத் திண்டாட்டம் மிகுதிதான். வேலை கிடைக்காவிடில் எப்படி பிழைத்திருப்பது? கிடைத்தவரையில் சாதகம் என்றும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. கடைசியாக, ஆக்கிரமிப்பு பிரெஞ்சுப் பிரதேசத்திற்கும் அனுக்கிரமிப்புப் பிரதேசத்திற்கும் போக்குவரத்து சாதனங்கள் சுலபமாக அமையும் என்று நினைக்கக்கூடும். இதுவும் மிகவும் முக்கியமான பிரயோஜனம் தான். ஏனெனில் எனக்குக்கூட ஒரு சமாசாரம் தெரியும். சாகும் தருவாயிலுள்ள தன் புருஷனை பெண்ஜாதி பார்க்கமுடியவில்லை. மார்ஷல் பிடேன் பாரிஸ் நகரத்தை தன் தலைநகரமாக மாற்றிக்கொள்ளும்படி சாதகம் ஏற்பட்டுவிடாது. இருப்பினும் ஏதோ கொஞ்சம் சாதகம் ஏற்படலாம்.

## இவைகளின் விலை.

இந்த சாதகங்களுக்கு பிடேன் விலைகொடுக்கிறான்? தெரியுமா? முன் தன்னுடன் நேசமாயிருந்த தேசங்களுக்கு எதிரிடையாகத்தான் ஒன்றும் செய்கிறதில்லை என்று கௌரவமாக சமீபத்தில் பிடேன் சொல்லிக்கொண்டார். சமீப காலத்து ஜெனரல் வேகாண்டு, பிரெஞ்சு ஏகசக்ராதிபத்திய தேசங்களை எவர் படையெடுத்தாலும் நாம் பாதுகாப்போம் என்று பிரகடனப்படுத்தினார். இப்பொழுதோவெனில், இவைகளுக்கு மாறாக டார்லான் ஜெர்மானியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார். தங்களை யுத்தத்திற்குப் போகவேணுமென்று ஜெர்மானியர் கோரவில்லை என்று டார்லான் சொல்லுகிறார். ஆனால், அவர்களின் உபயோகத்திற்கு யுத்ததளவாடங்கள் செய்யும்படி ஆக்ஞாபித்திருக்கிறார்கள். ஸிரியாவிலுள்ள பிரெஞ்சு விமான நிலயங்களை ஜெர்மானியர்களின் உபயோகத்திற்கு விடும்படி அனுமதி பெற்றிருக்கிறார்கள். இராக் தேசத்திற்கு நாஸிகளின் உபயோகத்திற்கு பிரெஞ்சு யுத்ததளவாடங்களை அனுப்பும்படி செய்துவிட்டார்கள். அனுக்கிரமிப்பு பிரெஞ்சு தேசத்துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த பொருள்களின் வெகு பாகங்களை ஜெர்மானியர்கள் எடுத்துக்கொள்ளும்படி விடப்பட்டிருக்கின்றன. பிரெஞ்சு வட ஆபிரிக்காவிற்குக் கூட்டம் கூட்டமாய் ஜெர்மானியர்கள் போகும்படி அனுமதிக்கும்படி செய்துவிட்டார்கள்.

ஜெர்மன் உதவிப் படைகளை, ட்யூனிஸ் வழியாக லிபியாவுக்கு அனுப்பும்படிக்கு இடம் கொடுக்கவும், ஸ்பெயினுக்கு வடக்கேயுள்ள பிரெனீஸ் மலைத்தொடர் வரை தாங்கள் ஜெர்மன் துருப்புகளை அனுப்ப இயலும்படி ஆக்கிரமிப்புப் பிரதேசத்தை விஸ்தரிக்கும்படியும் பிரான்ஸைக் கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். இது ஜிப்ரால்டர் கோட்டையைத் தாக்குவதற்காகச் செய்த ஏற்பாடு. முதலில் டார்லான், இங்கிலாந்து யுத்தத்திற்குத் தயார் செய்துகொள்ளாமலிருந்து விட்டது என்று புகார் செய்தார். இப்பொழுது இங்கிலாந்துதான் யுத்தத்தைக் கிளப்பிவிட்டது என்றும், ஜெர்மானியர்களுக்கு வெகு தாராள சிந்தனையுண்டென்றும், பிரிடிஷாருக்கு தயாதாக்ஷண்யமில்லையென்றும் டார்லான் சொல்லுகிறான்.

## எதிர் மந்திரம்.

இப்படிச் சொல்லுவதெல்லாம் இன்னும் ஏதாவது ஜெர்மானியர்கள் விட்டுக் கொடுக்கமாட்டார்களா என்றுமிருக்கலாம். ஒருக்கால் மார்ஷல் பிடேன் ரகஸ்யமாய்த் தன்னால் ஒன்றும் சாத்தியப்படவில்லையே என்று சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால், அட்மிரல் டார்லான் இப்படிச் சொல்லிக்கொள்ளுகிறானில்லை. இப்படி ஜெர்மனிக்கு, பிரெஞ்சுக்காரர் உதவிசெய்வதைத் தடுப்பதற்கு வேண்டிய காரியாம்சைகள் செய்யாமல் இங்கிலீஷ்காரர்கள் சும்மாயிருக்கமுடியாது. பிரெஞ்சு ஜெர்மன் ஒத்துழைப்பைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருந்தால், அந்த பிரிடிஷ் ஸர்க்கார் ஒரு நாள்கூட நிலைநிற்க அர்கமில்லை. ஏனெனில், இந்த ஒத்துழைப்பால் கேந்திரஸ்தானங்களிலுள்ள நமது சைனியங்கள் நிச்சயமாய்ப் பலியாகிவிடும். ஆதலால்தான் நாம், எதிரி எந்தயிடமிருந்தாலும் அந்த இடத்தில் நாம் தாக்குவோம் என்று சொல்லிவருகிறோம். "நாம் பிரெஞ்சுப் பிரதேசத்திலிருக்கிறோம்; நாம் பிரெஞ்சுக்கரையோர எல்லைக் கடலிலிருக்கிறோம். எங்களை யாவரும் தாக்கமுடியாது" என்று நமது சத்துருக்கள் சொல்லிக்கொள்ள நாம் விடமுடியாது. ஜெர்மானியர்களை ஜயிப்பது என்பதே வெகு பிரயாசை. அதிலும் அவர்கள் தாக்குதலிலிருந்து விலக்கு ஸ்தலம் என்று சொல்லி விட்டுக் கொடுக்கமுடியாது. இந்த யுத்தம் ஒரு பந்தாட்டமல்ல. விஷி ஸர்க்கார் மனுஷ்யாள் யாவரும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் கோளாராய்ச் சொல்லுவார்கள். நம்முடைய மனப்பான்மையை மாறுபாடாய்க் காட்டுவார்கள் என்றும் நாம் எதிர்பார்க்கவேணும். கடல் தளபதி டார்லான், இம்மாதிரி வேலை துவக்கிவிட்டான். சென்ற சனியன்று டார்லான் பேசியபோது "ஒருக்கால் இங்கிலாந்து ஜயித்தாலும்கூட, பிரான்ஸானது இரண்டாம் ரகத்தைச் சேர்ந்த ஒரு குடியேற்ற அந்தஸ்துள்ள நாடுபோல்தானிருக்கும்" என்றான். இதிலிருந்து அவன் அபிப்பிராயம், பிரான்ஸுக்கு ஏற்படும் அந்தஸ்து, பிரிடிஷ் குடியேற்ற நாடல்ல. ஜெர்மன் குடியேற்ற நாடுதான் என்றும், அவ்வாறிருப்பதுதான் பிரெஞ்சு இஷ்டம் என்று ஏற்படுகிறது. இது நிச்சயம் சம்பவிக்கப்போவதில்லை. பிரிடிஷ்காரர்கள் ஜயிக்கும் பக்ஷத்தில், பிரான்ஸ் ஏற்கனவேயிருந்துவந்த சுயேச்சையான அந்தஸ்தை மீண்டும் பெறும் என்றும், அதன் தேசங்களை மீண்டுமடையும் என்பதில் ஐயமில்லை. ஜெர்மனி ஜயிக்கும் பக்ஷத்தில், இம்மாதிரி பிரான்ஸ்

முந்திய அந்தஸ்தை அடையாது. நாம் அச்சுதேசக் கப்பல்களை பிரெஞ்சுக் கடல்களில் வெடிகுண்டு போட்டுத் தாக்கினாலும், ஜெர்மானியர்களுக்கென்று பிரஞ்சு கப்பல்களில் ஏற்றிச்செல்லப்படும் பொருள்கள் போகாவண்ணம், அந்தக் கப்பல்களை நாம் தடுத்தாலும், இவைகள் கடல்கொள்ளை என்று டார்லான் சொல்லுகிறான். பிரான்ஸ் சரணாகதியடைந்த பிறகு, நேசதேசத்தைச் சேர்ந்த 200 ஆயிரம் டன்கள் நிறையுள்ள கப்பல்கள் பிரெஞ்சுத் துறைமுகங்களில் டார்லான் கட்டாயமாய் வெளியே போகாவண்ணம் நிறுத்திவைத்துக்கொண்டிருக்கிறானே. இந்த வேலையை என்னவென்று சொல்லலாம். இது வீடு புகுந்து திருடுவதல்லவோ? நிச்சயமாய் பிரெஞ்சுக் கப்பல்கள் ஜெர்மானியர்களுக்காக உபயோகப்படுத்தப்படுமாயின், அவைகள் பிரெஞ்சுக்காரர்களுடையதாகமாட்டா. அவைகள் நடுநிலைமை வகித்த தேசத்தைச் சேர்ந்ததென்றும் பாவிக்கப்படமாட்டா. பிரெஞ்சு கப்பல்கள், அனுக்கிரமிப்பு பிரெஞ்சுதேச ஜனங்களுக்கும், அவர்களின் தேவைக்கும் வேண்டிய பொருள்களை ஏற்றச் செல்லுகிறதென்று முகாந்திரமிருந்தாலும் ஏன், நம்பிக்கையிருந்தாலும்கூட, பிரிட்டிஷ்காரர்கள் பிரெஞ்சு வியாபாரத்திற்கு தடங்கல் செய்யாமல, தங்கள் முற்றுகையை அடக்கி நடத்திவந்திருக்கிறார்கள். ஆனால் இன்று கடல் தளபதி டார்லானும், அவனைச் சேர்ந்தவர்களும் ஜெர்மனியை ஜயிக்கும் குருவி என்று எண்ணி அவர்கள் சார்பாய் வேலை செய்கிறார்கள் என்று நாம் தயக்கத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் ஜயிப்பது அரிது எனபதை எவ்வளவு சீக்கிரமாய் யாவரும அறியும்படி செய்கிறோமோ அவ்வளவு சீக்கிரமாய் நாம் ஜயிக்கவேணுமென்ற நோக்கத்துடன் பாடுபட்டு உழைக்கிறார்களோ அந்தப் பிரெஞ்சுக்காரர்கள் சொல்வதைக்கேட்க பலர் முன்வருவார்கள். நாம் ஜயிக்கவேணுமென்று விரும்பும் பிரெஞ்சுக்காரர்கள் இருக்கிறார்கள் என்பது நன்றாய்த் தெரிகிறது. ஏனெனில் டார்லான் பேச்சிலே ஒரு நடுக்கத்துடன் கலந்த பீதி த்வனிக்கிறது. தான் ஜெர்மனியுடன் ஒத்துழைப்பது என்ற கொள்கையை எவ்வளவு தூரம் பிரெஞ்சு ஜனங்கள் வரவேற்கிறார்களென்ற வகைகளாய் பீதியடைகிறான். ஜனங்களுக்கு ஜூன்மீ போர்டோ சரணாகதி பிடிக்கவில்லை. இன்றைய விஷி ஸர்க்கார் சரணாகதியடைவதை பிரெஞ்சுக்காரர்கள் வெறுக்கிறார்கள்.

---

## ஸமீபத்தில் கிடைத்த தகவல்.

(ஜூன்மீ 12உயன்று மான்சஸ்டர் கார்டியனின் ராஜதந்திர நிருபர் எழுதியது.)

ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் உள்ள சம்பந்தங்களில் நெருக்கடியான நிலைமை வந்துவிட்டதென்பதற்குச் சின்னங்களிருக்கின்றன. ருஷ்யாவிடமிருந்து, நடுநிலைமை வகித்து சாமான்கள் கொடுப்பதுமட்டுமல்லாமல் இன்னும் அநேகம் அடையவேண்டுமென்று ஜெர்மனி நினைக்கின்றது. 1939-ல் ஏற்பட்ட அனுக்கிரமண ஒப்பந்தம் ஜெர்மனிக்கு உபயோகமுள்ளதாகத்தானிருந்தது. பிறகு

இருவருக்கும் சிநேகம்தான் என்று இருதரப்பாரும் வாக்குறுதி செய்திருக்கிறார்கள் ஆகிலும் ருஷ்யா எவ்விதம் உதவி செய்யக்கூடுமோ அந்த அளவிற்கு ருஷ்யாவிடமிருந்து பொருளாதார உதவி ஜெர்மனிக்குக் கிடைக்கவில்லை.

ருஷ்யாவிடமுள்ள எண்ணெய், தானியம் விறு, மற்றுமுள்ளவைகளும் ஜெர்மனிக்குத் தேவையாயிருக்கும். புத்திசாலிகளான சிலர் ஜெர்மனியானது ருஷ்யாவுடன் ராணுவ உடன்படிக்கை ஏற்படுத்த முயலுகிறதென்று சந்தேகிப்பதற்கு அநேக மூகாந்திரங்களும் ரிபோர்டுகளும் கிடைத்திருக்கின்றன. ஜப்பானிலிருந்து கிடைத்த ஆதாரத்திலிருந்து அப்படிப்பட்ட ஒப்பந்தம் முடிந்துவிட்டதென்று வெளியாகிறது. இதைப் பிறகு மறுக்கிறார்கள். ருஷ்யாவுக்குக் கிடைத்திருக்கும் சாமான்கள் அதற்கு அவசியமானவை. முற்றுகையின் காரணமாக அளவிடப்பட்டிருக்கும் ரப்பர், ஈயம், செம்பு இவைபோன்ற பொருள்களை ஜெர்மனிக்காக வெளிநாடுகளில் ருஷ்யா வாங்கியனுப்பியது ஜெர்மனிக்கு உபயோகமுள்ளதாகயிருந்தது.

நெருங்கிய பொருளாதார சம்பந்தங்களுள்ள வகையிலும் ஜெர்மனியின் சங்கடங்களைத் தீர்க்கக்கூடிய வகையிலும் ஏற்படக்கூடிய ருஷ்யாவின் பூராவான ஒத்துழைப்பு ஜெர்மனிக்கு இன்னும் கிட்டவில்லை. ராஜீய சங்கடங்களால் இதற்குக் காரணங்கள் வெளியிடப்படவில்லை. அவர்களுக்குத் தேவையான பொருளாதாரங்களையும் உணவுப் பொருள்களையும் அடைவதற்கு ஜெர்மானியர்களை ருஷ்யாவுக்குள் நுழைய அனுமதிக்கவேண்டும். இந்த விஷயம் ருஷ்யாவுக்குத் தெரிந்ததுதான். தொழிற்சாலைகளின் உற்பத்தி அதிகரித்துவிட்டதால் ஜெர்மனிக்குத் தேவையான எல்லா சாமான்களையும் தயாரிக்கவேண்டியிருக்கிறது. அவைகளை ஏற்றிச்செல்ல அவர்களிடம் போதுமான ரயில்வண்டித் தொடர்கள் இல்லை என்று ருஷ்யாவிலுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இதற்குத் தேவையான நபர்களை ருஷ்யாவுக்குள் வரும்படி அவர்கள் அனுமதித்தால் இந்தப் பிரச்னைகளெல்லாவற்றையும் ஜெர்மானிய யந்திர நிபுணர்கள் தீர்த்துவிடுவார்களென்று ஜெர்மனி பதிலளிக்கிறது. ருஷ்யாவின் பொருளாதாரங்களை ஸ்வபிரயோஜனம் செய்துகொள்ள ஜெர்மனி சொல்லும் வியவகாரங்களும் அவைகளுக்கு பதிலும் உபயோகமற்றவை. ராஜீய சம்பந்தமான நெருக்கடிகளும் ஜெர்மனியின் தேவைகளும் நோக்கங்களும்தான் முக்கியமானவை. ஜெர்மனியின் சைனியங்களை அணிவகுத்திருப்பதிலிருந்து ருஷ்யாவைப் பொருளாதார வழியிலோ அல்லது ராணுவ முறையிலோ அல்லது இருவகையிலுமோ தாக்குவது என்ற அபிப்பிராயத்துடன் ஜெர்மனி ஏற்பாடு செய்துவருகிறதென்று புலப்படுகிறது. கருங்கடலில் அநேக இடங்களில் ஜெர்மானியத் துருப்புகளின் சேமிப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கிரீஸ் தேசத்தை இதாலியர்கள் ஆக்கிரமணம் செய்யும்படி செய்துவிட்டு, லிபியாவில் நடக்கும் யுத்தத்துக்குத் தேவையில்லாத வீரம் பொருந்திய பெரிய சேனையை அங்கிருந்து வெளிப்படுத்திவிடுகிறதென்று ஜெர்மனி செய்திருக்கும் தீர்மானமானது இந்தச் சேமிப்புகளை பலப்படுத்துகிறது.

ஐரோப்பா கண்டம் பூராவும் ஜயித்து விட்டு, அங்கே சமீப காலத்தில் யாதொரு சண்டையும் போட அவகாசமில்லாதிருக்கும்பொழுது, ஜெர்மனி

யானது தன்னுடைய ராணுவ பலத்தின் பூரா வலுவையும் ருஷ்யாவின்பேரில் பிரயோகிப்பதற்கு அனுகூலமாயிருக்கிறது.

ஐரோப்பா கண்டத்திலுள்ள சில அறிவாளிகளின் அபிப்பிராயம் யாதெனில் "ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்குமுள்ள சம்பந்தங்கள் நெருக்கடியான நிலைமையை அடைந்திருப்பதற்கு, ஐரோப்பாவில் அநேக இடங்களில் விளைவுக் குறைவு ஏற்படக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுவதுதான் காரணம்". மற்றொரு மாரி காலத்துக்குமுன் யுத்தம் முடிவடையாதென்று ஹிட்லருக்கு நன்ருய்த் தெரிந்து விட்டது. ஆகையால் எவ்வகையிலும் ஜெர்மனிக்கு உணவுப் பொருள்களை சம்பாதித்து விடவேண்டுமென்று ஹிட்லர் ஆசைப்படுகிருன். ஜெர்மனியின் அபிப்பிராயப்படி ருஷ்யாவானது ஐரோப்பாவின் களஞ்சியம். ஆகையால் தன் ஐச்வர்யங்களை ஜெர்மனிக்குக் கொடுத்துவிடும்படி ருஷ்யாவைச் செய்துவிட வேண்டியதுதான் என்று நினைக்கிருர்கள்.

ஜெர்மனியின் தற்கால நோக்கம் எப்படி இருப்பினும், இப்பொழுது ஜெர்மனி செய்துவரும் ராணுவ வெருட்டலிலிருந்து ருஷ்யாவுக்கு அபாயம் நேரிடுமென்பது சந்தேகமில்லை. யூக்ரேனில் ஜெர்மனி பிரவேசிக்க வசதி இருக்கும்பொழுது, ருஷ்யாவுடன் ராணுவ ஒப்பந்தமோ அல்லது பொருளாதார ஒப்பந்தமோ ஜெர்மனி வெற்றிகரமாகச் செய்து விடுமென்பதிலும் சந்தேகப்பட வேண்டிய தில்லை. பொருளாதார முறையில் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால், பிரிடனுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் நீடித்த யுத்தத்தை நடத்துவதற்குத் தனக்கு சக்தி யேற்பட்டுவிட்டதென்று சொல்ல ஜெர்மனிக்கு இயல்பு உண்டாகும். ஜெர்மனி யின் அபிப்பிராயப்படி, அநேக வருஷங்கள் யுத்தம் செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டாலொழிய ஜனநாயக வல்லரசர்கள் யுத்தத்தை முடிவு செய்ய சமாதானம் பேச ஆரம்பித்து விடுவார்கள்.

ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் ராணுவ ஒப்பந்தம் ஏற்பட்டால், ருஷ்யாவின் அபிப்பிராயப்படி சிலபக்கப் பிராந்தியங்களில் சண்டைபோடுவதைத் தவிர ஜெர்மானியர் பக்கத்தில் நின்று சண்டை செய்யாது என்றுதான் புலப்படுகிறது. ருஷ்யா செய்யக்கூடியது யாதெனில் மத்திய கிழக்குக்கு ஜெர்மன் துருப்புகள் செல்ல அனுமதிப்பதுதான்.

# பிரிடன், அச்சுநாடுகள் இவைகளின் கடற்படை பலம்.

## ஒரு பரிசோதனை.

மேமீ 28-ம் தேதியன்று டெயிலி டெலகிராப் பத்திரிகையின் கடற்படை நிருபர் எழுதியது.

சமீபத்தில் நஷ்டமானவைகளையும் கணக்கிடாமல், பிரிடிஷ் கடற்படையில் 14 சண்டைக் கப்பல்களும் இரண்டு சண்டைக் க்ருயிஸர்களுமிருக்கின்றன. அதாவது புதிதாய் கட்டப்பட்ட 5,000 டன் எடைமானமுள்ள சண்டைக் கப்பல்கள் கிங் ஜார்ஜ் V, பிரின்ஸ் ஆப் வேல்ஸ், இதைத் தவிர ட்யூக் ஆப் யார்க் என்பது சமீபகாலத்தில் முடிந்திருக்கவேண்டும். 30,000 டன்களுக்குக் குறைவான எடைமானமுள்ள நெல்ஸனும், ராட்னியும், 30,600 முதல் 31,100 டன்கள் எடைமானமுள்ள க்வீன் எலிஸபத் வகுப்பைச் சேர்ந்த 5 கப்பல்கள் இவைகளில் நான்கைத் திருத்தி அமைத்து நவீன முறையில் கட்டியிருக்கிறார்கள். 29,150 டன்கள் எடைமானமுள்ள ராயல் ஸாவரன் என்னும் வகுப்பைச் சேர்ந்த 4 கப்பல்கள், 32,000 எடைமானமுள்ள ரினௌன், ரிபல்ஸ் என்றும் பெயருள்ள இரண்டு சண்டைக் க்ருயிஸர்கள்.

இரண்டு சிறிய சண்டைக் கப்பல்களைத் தவிர எதிரிபக்கத்தில் ஜெர்மனிக்கு 3, இதாலிக்கு 5, சண்டைக் கப்பல்களுந்தான் பாக்கியிருக்கின்றன. இரண்டு சிறிய சண்டைக் கப்பல்களும் கவசம் பூண்ட க்ருயிஸர்களாகினும் பெரிய சண்டைக் கப்பலுடன் யுத்தம் செய்ய சக்தியற்றவை. ஜெர்மன் கப்பல்களாவன: பிஸ்மார்க்குடன் ஜோடியாய் சொல்லப்பட்ட 35,000 டன் எடைமானமுள்ள டிர்பிட்ஸ் ஒன்று. 26,000 டன்கள் எடைமானமுள்ள நீஸ்நௌ, ஷார்ன்ஹார்ஸ்ட் என்ற கப்பல்கள் ப்ரெஸ்டில் அடைபட்டுக்கிடக்கின்றன.

இதாலியின் கப்பல்கள் 35,000 டன்கள் எடைமானமுள்ள லிட்டோரியோவும் விட்டாரியோவெனடோவும். இவைகளில் ஒன்று சென்ற நவம்பர் மாதத்தில் டாரண்டோவில் கடற்படையிலிருக்கும் விமானங்களால் டார்பிடோ செய்யப்பட்டது. மற்றொன்று மடபான் யுத்தத்தில் அநேகம் டார்பிடோக்களால் அடிக்கப்பட்டது. துறைமுகத்துக்கு அடைவதற்கு முன்னால் விட்டாரியோ வெனடோ மூழ்கிவிட்டதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இதாலிக்கு ஏற்கனவேயிருந்த மூன்று சண்டைக் கப்பல்களை நூதன வழியில் திருத்தியமைத்திருக்கிறார்கள். அதாவது ஆண்ட்ரியா டோரியா, காலியோஸீஸரே, கேயோ டூலியோ (23,622 டன்கள் எடைமானமுள்ளவை). இவைகளில் ஒன்று டாரண்டோ துறைமுகத்தில் நாசமாகிவிட்டது.

## விமானங்கள் கொண்டுபோகும் கப்பல்கள்.

விமானங்கள் கொண்டுபோகும் கப்பல்கள் எதிரியிடம் இல்லையென்றே சொல்லலாம். இவ்வகையில் பிரிடனிடம் 8 கப்பல்கள் உள. ஜெர்மனி ஒன்று

கட்டிமுடித்திருக்கிறது. 19,250 டன்கள் எடைமானமுள்ள கிராப் ஸெப்பிளின். இதைப்போன்ற மற்றொன்று இன்னும் கட்டிமுடிந்ததாகத் தெரியவில்லை. இதாலி ஒன்றுமே கட்டவில்லை.

## க்ரூயிஸர்கள்.

க்ரூயிஸர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் யுத்த ஆரம்பத்திலிருந்ததைவிட இப்பொழுது பிரிடன் அதிக வலுவடைந்திருக்கிறது. 8" பீரங்கிகளுள்ள 15 க்ரூயிஸர்களும், 6" பீரங்கிகளுள்ள 43 க்ரூயிஸர்களும் பிரிடனிடமிருக்கின்றன. பின்னும் விமான எதிர்ப்பு வேலைக்காக முக்கியமாக வைக்கப்பட்ட ஆகாயத்தில் உயர அடிக்கக்கூடிய பீரங்கிகளுள்ள கவசங்களோடு கூடிய கப்பல்களுமிருக்கின்றன.

இந்த சங்கியைக்குப் பதிலாக ஜெர்மானியர்களிடம் அதிகமான கப்பல்கள் இல்லை. அவர்களிடம் 8" பீரங்கிகளுள்ள 4 க்ரூயிஸர்கள்தானிருக்கின்றன. அதாவது அட்மிரல் ஹிப்பர், ஸெய்க்ளிட்ஸ், பிரின்ஸ் யூஜென், மற்றொன்று (இதன் பெயர் ஆதியில் லூயெட்ஸௌ என்று, இப்பொழுது மாறிவிட்டது). 6" பீரங்கிகளுள்ள (வாஸ்தவத்தில் 5·93" தான் உள்ளவை) 4 க்ரூயிஸர்களுண்டு. அதாவது நூரென்பர்க், லீப்ஸிக், கோல்ன், எம்டன் இவைகளில் ஒன்றுவது நாசமாயிருக்கக்கூடும்.

இதாலியிடம் 8" பீரங்கிகளுள்ள 4 க்ரூயிஸர்களிருக்கின்றன. இவைகளில் இரண்டு டாரண்டோ எதிர்ப்பில் டார்பிடோவினால் கெடுதியடைந்துவிட்டன. 6" பீரங்கிகளுள்ள 9 அல்லது 10 க்ரூயிஸர்கள், மடபானில் ஒன்று மூழ்கியிருக்கலாம். சென்ற யுத்தத்துக்கு முன்னிருந்தே இருந்து வரும் சண்டைக்கு லாயக்கில்லாத இரண்டு பழைய க்ரூயிஸர்களுமிருக்கின்றன.

## நாசகாரிகள்.

பிரிடனிடம் 247 நாசகாரிகளிருக்கின்றன. இவைகளில் யுத்த ஆரம்பத்திற்குப் பிறகு உத்தரவின் பேரில் கட்டப்பட்டு உபயோகத்திலிருந்து வருபவைகளும் சேர்ந்ததுதான். ஜெர்மனியிடம் 24 இருக்கலாம், 600 முதல் 800 டன்கள் எடைமானமுள்ள டார்பிடோ உள்ள 40 படகுகளுமிருக்கக்கூடும். இதாலியிடம் 40 நாசகாரிகளும் டார்பிடோ படகுகளில் 50-ம் இருக்கின்றன. இவைகளில் அநேகம் வெகு நாளானவை. ஆகையால் வேலைக்கு லாயக்கில்லாதவை.

## ருமேனியாவில் உணவுப் பொருள்களின் குறைவு.

## ஹங்கேரியின் செலவில் இதாலி லாபமடைகிறது.

## விமானத்தாக்குதலினின்றும் தப்பித்துக்கொள்ள நாஸிகள் போலந்தில் தங்குகிறார்கள்.

ஆக்கிரமிப்பு நாடுகளின் ஸ்திதியைப்பற்றி ஒரு வியாசத்தில் மேமீ 25-ம் தேதியன்று **ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின்** விசேஷ நிருபர் எழுதியது.

ருமேனியாவில் உணவுப்பொருள்களின் குறைவு அதிகமாயிருக்கிறது. அடிக்கடி ருமேனியாவின் அதிகாரவர்க்கத்தார், இந்த இல்லாமைக்கு ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு சேனை இங்கிருப்பது காரணமில்லையென்று வீணாகச் சொல்லி வருகிறார்கள். ஜெர்மானியர்கள் தங்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களை எடுத்துக்கொள்வதில் தயங்கவே இல்லை.

ஐரோப்பாவில் ஏராளமாக கோதுமை தானியம் விளையக்கூடிய ஒரு நாட்டிலேயே ரொட்டிகூட பங்கிட்டுக்கொடுக்கப்படுகிறது. சாப்பாடு சம்பந்தமாகக் கலகங்கள் பரவுகின்றன. அகாரணமாக அந்த தேசத்திலுள்ள பெரிய மாவு மில்களையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய் தீக்கிரையாக்குவதினின்றும் நிலைமை கெடுதலடைந்து வருகிறது.

அண்டோனெஸ்கு செய்துவரும் 'எல்லோரையும் ருமேனியர்களாக ஆக்குதல்' என்ற ஏற்பாட்டுக்கு அநேக இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன.

வியாபார முதல்களில் 100க்கு 90 வீதம் பாத்தியமுள்ள யூதர்களிடமிருந்து, சொத்துக்களையெல்லாம் வாங்கி அதற்குப் பணம் 20 அல்லது 30 வருஷக் கெடுவில் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுப்பதாகவும், சொத்துக்களை ருமேனியர்களுக்கு விற்றும் விற்பனைத்தொகையை அவர்களும் 20 முதல் 30 வருஷத்திற்குள் கொடுப்பதென்றும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

உண்மையில் அநேகம் தொழில்கள் ஜெர்மானியர் வசமாகிவிட்டன. ஆகையால் அதிருப்தி பரவிக் கொண்டிருக்கிறது. "ஒரு பரதேசஸ்தனுக்குப் பதிலாக மற்றொருவன் வரப்போகிறான்" என்று சொல்லுகிறவர்களெல்லாம் கடுமையான சிக்ஷைக்கு உள்ளாக்கப் படுவார்களென்று அண்டோனெஸ்கு பகிரங்கப்படுத்தும் படியாக ஆகிவிட்டது.

### பல்கேரியா.

ஸலோனிகாவிலுள்ள பல்கேரியாவைச் சேர்ந்த ராணுவ தூதுகோஷ்டியார் ஜெர்மன் துருப்புகளிடமிருந்து நகரத்தைக் கைப்பற்றிக் கொள்ளத் தயாராகயிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் துறைமுகத்தையும் விமான நிலயத்தையும் பாதுகாத்து வருவார்கள். பல்கேரியாவின் துருப்புகளிடம் நகரத்தை ஒப்படைத்துவிட ஜெர்மானியர்கள் தயாராகயிருக்கிறார்கள். இதற்குக் காரணம், பல்கேரியாவுடன் ஸலோனிகாவைச் சேர்த்து விடுவது என்று சொன்னவாக்குறுதியை ஜெர்மனி நிறைவேற்றவேண்டுமென்று ஜெர்மனி சார்பாகயிருக்கும் பல்கேரியர்கள் அடிக்கடி வற்புறுத்துகிறார்கள்.

துருக்கிபக்கமிருக்கும் எல்லைச் சரகத்தை மூடிவிட்டார்கள். ஏனென்றால், பல்கேரியா ஆக்கிரமித்துவிடுமோ என்று பயந்த ஒவ்வொருவரும் மேற்கு கிரேஸிலிருந்து துருக்கிக்கு அடைக்கலம் புகுறுகிறார்கள்.

## ஹங்கேரி.

புடாபெஸ்டில் குரோஷியாவைப்பற்றிய ஏற்பாட்டைப்பற்றி அதிருப்தியானது பகிரங்கமாக வெளியிடப் படுகிறது. ஹங்கேரியில் பார்டாலி தலைமை வகிக்கும் உத்தியோகஸ்தர்களின் கக்ஷியான "ஜீவன இயக்க" த்தின் அங்கத்தினர்களும் கூட ஹங்கேரியின் மந்திரி சபை சரியானபடி நடக்கவில்லையென்று வெளிப்படையாய்த் தெரிவிக்கிறார்கள்.

குரோஷியாவை ஹங்கேரிக்குக் கொடுத்துவிடுவதாகப் பேசப்பட்டது. குரோஷியாவின் சிங்காசனத்தில் இதாலி அரசரின் மருமகனை ஸ்தாபித்து ஸ்லாவ் தேசத்தை இதாலிய சாம்ராஜ்ஜியத்தின் எல்லைச் சரக காபந்தாகச் செய்திருப்பது ஹங்கேரிக்கு மூஞ்சியில் அடித்தமாதிரி இருக்கிறது.

புடாபெஸ்டில் அதிருப்தி மிகவும் அதிகமாகயிருப்பதனால்தான், ஸ்பாலெடோ பிரபுக்கு குரோஷியாவின் கிரீடத்தைக் கொடுத்த சமயத்தில் நடந்த சடங்குகளுக்கெல்லாம் ரோமிலிருக்கும் ஹங்கேரிய தூதர் போகவில்லை. ஏற்பாட்டின் தாத்பரியம் என்னவென்று புடாபெஸ்டிலுள்ளவர்கள் நன்றாய் அறிகிறார்கள். பிரெஞ்சு ராஜ்ஜியத்தில் கொஞ்சமேனும் இதாலிக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையை விட்டுவிடும்படி இதாலிக்கு ஹிட்லர் அறிவித்து விட்டான். ஹிட்லர் இதை டார்லானுக்கு வாக்குத்தத்தம் செய்துவிட்டான். ஆகையால் சிறிய அச்சு நாடுகளுக்கு வாக்களித்திருந்த தேசங்களையெல்லாம் முஸோலினி எடுத்துக்கொண்டு விட்டான். ஹங்கேரிக்கு நஷ்டமும் முஸோலினிக்கு லாபமும் கிடைத்து விட்டது.

## யூகோஸ்லாவியா.

மூன்று நாட்கள் இடைவிடாது வெடிகுண்டுகள் போட்டு நாசமடைந்த பெல்கிரேட்டின் கட்டடங்களின் தூள்களை மும்முரமாக வெளிப்படுத்துகிறார்கள். மேமீ 1 தேதிக்குமுன் 10,000 சங்கியையுள்ள மனிதர்கள், ஸ்திரீகள், குழந்தைகளின் பிரேதங்கள் தேடியெடுக்கப்பட்டிருக்கின்றன. இடிந்த தூள்களை அப்புறப் படுத்துவது தொடர்ச்சியாக நடந்துவருகிறது. இன்னும் 5,000 பிரேதங்கள் எடுபடக்கூடுமென்று அதிகாரிகள் மதிக்கிறார்கள். காயம் பட்டவர்களுள்பட 60,000 பேருக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்குமென்று தோன்றுகிறது.

சிகிச்சை வசதிகள் போதுமான அளவு கிடையாது. அநேகம் தடவை காயம் பட்டவர்களை ஸாக்ரப்புக்குக் கொண்டுபோகவேண்டியதாயிற்று.

யூகோஸ்லாவியாவின் எதிர்ப்பு பிரயோஜன மற்றதாகப்போய்விட்டதற்கு துருப்புகளைச் சரியானபடி அணிவகுக்காததுதான் காரணமென்றும் அதற்கு

ஸெட்சோவிச் துரைத்தனத்தாரின் மெம்பர்கள் தான் காரணம் என்றும் தீவிரமான உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பெல்கிரேட்டில் பகிரங்கமாக இந்த உணர்ச்சியை வெளிக்காட்டுவதில்லை. அவர்களில் அநேகர் ஸாக்ரப் பிரதேசத்தில் வசித்துவருகிறார்கள். இங்கு குயிஸ்லிங் அரசாக்ஷியானது அவர்களைக் காப்பாற்றி வருகிறது.

## போலந்து.

போமரேனியாவிலும், போஸேனியாவிலும் வெளியாகும் ஜெர்மன் பத்திரிகைகளில், ஜெர்மனியிலிருந்து அநேக சுற்றுப் பிரயாணிகள் ஜெர்மனியோடு சேர்க்கப்பட்ட போலிஷ் மாகாணங்களில் நீண்டகாலமாகத் தங்கிவருகிறார்களென்று வெளியிடுகிறார்கள். இம்மாதிரியான நிலைமையை நாம் பொறுத்துக் கொள்ளமுடியாதென்று பேபர்களில் அறிவிக்கிறார்கள். இந்த இடங்களிலுள்ள போஜன சாலைகளில் சாப்பிடுபவர்களுக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படுமென்றும் நினைக்கிறார்கள்.

பிரிடிஷ் விமானப்படையின் குண்டு வீச்சிலிருந்து தப்பிக்க, ஆயிரக்கணக்கான ஜனங்கள் ரைன்லாந்துப் பிரதேசத்தையும் ஜெர்மானியத் துறைமுகங்களையும் விட்டு ஓடிவிட்டார்கள்.

## ஹாலந்து.

தங்கள் அரசரிடம் விசுவாஸமுள்ளவர்களே ஹாலந்திலிருக்கும் நாஸிகளை அருவருப்புடன் மதிக்கிறார்களென்பதற்கு ஒவ்வொருநாளும் டச்சு நாஸிகளிடமிருந்தே புதிதாக சாக்ஷியம் கிடைக்கிறது. நாஸிகளின் பத்திரிகையான நாஷனல் டாக்பளாட்டில் ராட்டர்டாமில் நாஸிகளுக்கு எதிரிடையாக புரக்ஷிகள் வெளிப்படையாக அதிகரித்துவருகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. தெருக்கள் வழியாக நாஸிகள் ரோந்து சுற்றும்பொழுது வீட்டுக்கூரைகளிலிருந்து வெடிகள் போடப்பட்டன. ஓடுகள் மழைபோல எறியப்பட்டன. சமீபத்தில் நடந்த கலவரத்தில் 15 போலீஸ்காரர்கள் காயமடைந்தனர்.

ஜனங்களுக்கு ஒலிபரப்பியதில் கியாதிபெற்ற டச்சு நாஸி பிரமுகர் வருத்தத்துடன் பின் வருமாறு பேசினார்.

"நாஸிகளுடைய ஸ்தாபனம் என்பதனால் "மாரிகால உபகார நிதி"க்கு ஒன்றும் கொடுக்கமாட்டேன் என்று சொல்லும் ஒரு டச்சுக்காரன் நாஸிகள் வீட்டுக்கு முன்னால் தேசிய கீதங்களைப்பாடும் தெருப் பாடகனுக்கு சந்தோஷமாக ஒரு கில்டர் கொடுக்கிறான்".

---

# கிரீட்.

கிரீட் யுத்தத்தின் லாப நஷ்டங்களைப்பற்றி எழுதும்பொழுது, டாக்டர் கோயபல்ஸ் சொல்லுகிறபடி நமது நிலை அவ்வளவு பயங்கரமாக இல்லையென்று இதில் மூர்த்தியே சொல்லியிருக்கிறோம்.

சேதங்களைப்பற்றி சில முக்கியமான கணக்குகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. வியாக்கியானமன்னியில் அவைகளை இங்கு பிரசுரிக்கிறோம்.

பிரிட்னுடைய முகான்மையான சைனியத்தில் கொல்லப்பட்டவர்களும், காயம்பட்டவர்களும், காணுமல்போனவர்களும் சேர்ந்து ஒரு வகுப்பு (division)க்குக் குறைச்சலாகவே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நடுநிலே வகிப்பவர்களின் அபிப்பிராயப்படி ஜெர்மனிக்கு கிட்டத்தட்ட 86,000 நபர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கும். சண்டையில் ஈடுபட்ட கவசம் பூண்ட டிவிஷன்களில் 36,000 நபர்களும், காலாட்படையில் 17,000 நபர்களும், மலைகளில் சண்டை செய்த டிவிஷன்களில் 23,000 நபர்களும், ஹிட்லருடைய சொந்த சேனையிலிருந்து (அதாவது அடால்ப் ஹிட்லர் டிவிஷன்) 10,000 நபர்களும் நஷ்டமடைந்து விட்டார்கள். அதாவது, ஜெர்மனியின் நஷ்டங்கள் பிரிடிஷாருக்கு ஏற்பட்டதை விட ஆறு மடங்குக்குக் குறையாமல் ஏற்பட்டிருக்கும். குறைந்த பக்ஷம் 200 ஜெர்மன் வெடிகுண்டு விமானங்களும், சண்டை விமானங்களும், துருப்புகள் ஏற்றிச்செல்லும் விமானங்களும் யூகோஸ்லாவிய, கிரேக்க, பிரிடிஷ் விமானங்களாலும் விமான எதிர்ப்பு பீரங்கிகளாலும் நாசமாக்கப்பட்டன. ஆதென்ஸ் பேரில் நடந்த ஒரே விமானப்போரில் பிரிடிஷ் விமானப்படை 22 ஜெர்மன் விமானங்களை சுட்டுத்தள்ளிவிட்டது. யூகோஸ்லாவியாவில் யுத்தம் ஆரம்பித்த பொழுது ஜெர்மனிக்கு சொந்தமான 700 டாங்கிகளில் 200 நாசமடைந்து விட்டன.

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### முஸோலினி (Mussolini) வேறு விதமாகச் சொல்லுகிறுர்.

இதாலி (Italy) யுத்தத்தில் இறங்கி ஒரு வருஷம் பூர்த்தியான தினத்தன்று பேசிய பேச்சை பெர்லின் ரேடியோ ஜூன் மாதம் 12-ம் தேதியன்று ஒலிபரப்பியது. அதில் அவர் இதாலிக்கும், கிரீஸு (Greece)க்கும் அல்பேனியா (Albania)வில் நடந்த சண்டையைப்பற்றி விவரமாக எடுத்துரைத்தார். "அக்டோபர் மாதத்திலிருந்து மே மாதத்தின் கடைசிவரை இதாலிக்கு 14,502 ஸோல்ஜர்கள்நஷ்டம்." ஆனுல் அவர் அவருடைய யுத்த இலாகா கொடுத்திருந்த

கணக்கை ஒப்பவில்லை போலும். யுத்த இலாகா வெளியிடும் மாதாந்திர அறிக்கைகளிலிருந்து பின் வரும் கணக்கு வெளியாகியிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| உயிர் துறந்தவர்கள் | ... | ... | 13,157. |
| காயம்பட்டவர்கள் | ... | ... | 38,064. |
| கணக்கில் வராதவர்கள் | ... | ... | 25,513. |

"நாம் கிரீஸை வஞ்சம் தீர்த்துக்கொண்டோம்" என்று முஸோலினி (Mussolini) உறுமினார். ஆனால் அன்றையதினமே இதாலிய யுத்த இலாகா மே மாத அறிக்கை அந்த மாதத்தில் இதாலிக்கு ஏற்பட்ட "நிச்சந்தேகமான" நஷ்டத்தை வெளியிடுகிறது.

## கிரீஸ்—அல்பேனிய எல்லையிலும்; அல்பேனிய—யூகோஸ்லாவியா எல்லையிலும்.

| | | | |
|---|---|---|---|
| உயிர் துறந்தவர்கள் | ... | ... | 1,430. |
| காயம்பட்டவர்கள் | ... | ... | 4,123. |
| காணமல் போனவர்கள் | ... | ... | 223. |

## இதாலிய—யூகோஸ்லாவிய எல்லை.

| | | | |
|---|---|---|---|
| உயிர் துறந்தவர்கள் | ... | ... | 14. |
| காயம்பட்டவர்கள் | ... | ... | 24. |

இந்தக் கணக்கெல்லாம் மே மாதத்தில் ஏற்பட்டவை. ஏப்ரல் 18-ம் தேதி யூகோஸ்லாவியா (Yugoslaiva) சைனியம் சரணகதி அடைந்து விட்டது. ஏப்ரல் 23-ம் தேதியே அல்பேனிய எல்லையிலிருந்த கிரேக்க சைனியமும் சண்டையை நிறுத்திவிட்டது. அநேகமாக ஏப்ரல் 30-ம் தேதியோடு கிரீஸ் (Greece) தேசத்திலேயே சண்டை நின்றுவிட்டது.

ஆகையால் மே மாதத்தில் இதாலிக்கு இங்கெல்லாம் நஷ்டமென்றால் அங்கு பல இடங்களில் இன்னும் சின்னச் சண்டைகள் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. முஸோலினி (Mussolini) கிரேக்கர்கள் மேல் பழி தீர்த்துக் கொண்டதாக அறிவித்தாலும் யூகோஸ்லாவியாவும், கிரேக்கர்களும் இன்னும் அப்படி நினைத்துக்கொண்டிருக்கவில்லை. அங்கே ஹிட்லர் இதாலிய சைனியங்களை காவல் காக்க வைத்திருக்கிறார். முஸோலினியுடைய 80 லக்ஷம் சைனியங்கள் அதற்குத்தான் லாயக்கு என்று ஹிட்லர் (Hitler) நினைத்துக்கொண்டிருக்கிறார் போலும். கிரேக்கர்களும், யூகோஸ்லாவியர்களும் தங்களுடைய பழியை அவர்களிடையே தீர்த்துக்கொள்கிறார்கள் போலும்.

## பெர்லினும், (Berlin) டோக்கியோ (Tokyo)வும்.

பிரசாரத் துறையில் அச்சு நாடுகளின் மூன்று கூட்டாளிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்பது கோயபெல்ஸி (Goebbels)ன் தீவிரமான எண்ணம். ஆனால்

அப்படி இருப்பதில்லை. உதாரணமாக ஜூன் மாதம் 10-ம் தேதியன்று பெர்லின் ரேடியோ எண்ணிக்கையில் அதிகமாயிருக்கும் பிரிடிஷ் துருப்புகளை விஷி (Vichy) சைனியங்கள் தைரியமாக எதிர்த்துப்போராடுகின்றன என்று கூறிற்று.

ஆனால் அதற்கு முதல் நாள் தான் டோக்கியோவிலிருந்து பின் வரும் செய்தி வெளியாயிற்று. "பிரிடிஷ் துருப்புகளும், டிகால் (De Gaulle) துருப்புகளுமாகச் சேர்ந்து 20,000 பேர்கள் தான் இருக்கிறார்கள். பிரெஞ்சு சைனியத்திலோ 40,000 அல்லது 50,000 துருப்புகள் இருக்கின்றனர். அதில் பலர் ராணுவ உத்தியோகஸ்தர்கள். ஆகையால் பிரிடிஷ் சைனியத்தைக்காட்டிலும், பிரெஞ்சு சைனியம் அதிக பலம் வாய்ந்தது.

## ஆபிரிக்காவில் ஜெர்மன் முன்னேற்றத்தின் வேகம்.

ஜூன் மாதம் 12-ம் தேதி ஜெர்மன் ரேடியோ ஆபிரிக்காவில் தான் பெற்ற வெற்றியைப்பற்றி ஜம்பமடித்துக்கொண்டது. "பலங்கொண்ட பிரிடிஷ் சைனியத்தை எதிர்த்து ஜெர்மன் ஆபிரிக்கப்படை இரண்டே மாதத்தில், 1,100 மைல்களுக்கு மேல் முன்னேறியிருக்கிறது."

1,100 மைல்கள் என்று ஜெர்மன் ரேடியோ சொன்னது ட்ரிபோலி (Tripoli)யிலிருந்து எகிப்திய எல்லை வரையில். ஆனால் பிரிடிஷ் சைனியமோ எல் அகிலா (El Agheila) விற்கு மேற்கே இல்லவேயில்லை. ஆகையால் அவர்கள் சொன்ன 1,100 மைல்களில் பாதி தூரம், எதிர்ப்பு இல்லாமல் முன்னேறி விட்டனர். மற்றொரு பாதியில் [அதாவது ஸோலம் (Sollum)லிருந்து எல் அகிலா (El Agheila) வரை] ஒரே ஒரு பிரிடிஷ் கவசமணிந்த படையும், ஒரு காலாட்படையும் தானிருந்தது. ஏனென்றால் எகிப்திலிருந்த சைனியத்தில் 4 படையை கிரீஸு (Greece)க்கு அனுப்பியாகி விட்டது.

இத்துடன் பிரிடிஷ் படைத்தலைவர் வேவல் (Wavell) செய்திருக்கும் காரியத்தைக் கவனிப்போம். இரண்டு மாதத்தில் 800 மைல்கள் பிரிடிஷ் சைனியங்கள் முன்னேறியதுமில்லாமல் எட்டு இதாலிய பட்டாளங்களையும் கைதியாக்கியிருக்கிறார்கள்.

## பிரிடிஷ் மனோபாவம்.

பிரெஞ்சு சைனியங்களை முன்னே வைத்துக்கொண்டு ஸிரியாவில் பிரிடிஷ் சைனியங்கள் முன்னேறுவதிலிருந்து பிரிடிஷாருடைய குணம் தெரிந்து விட்டது என்று ரோம் (Rome) ரேடியோ ஜூன் மாதம் 8-ம் தேதி கூறிற்று. "பிரெஞ்சுக்காரர்களையே ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளும்படியாகச் செய்துவிட்டார்கள்" என்று பிரிடிஷார் மீது குறைகூறிற்று.

ஜெனரல் காட்ரு (Catroux)வின் பிரெஞ்சு சைனியங்கள் முன்னேறும் இடங்களைத் தவிர, பல இடங்களில் பிரிடிஷ் சைனியங்களும் பிரெஞ்சு சைனியங்களின் ஒத்தாசையில்லாமல் முன்னேறுகின்றன. ஜெனரல் டீ காலி (De Gaulle)ன் சைனியங்களை எதிர்க்கும் ஸிரியா பிரெஞ்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள் அல்ல.

தேசத்துரோகிகள், அவர்கள் தங்கள் தேசமாகிய பிரான்ஸை (France) காட்டிக்கொடுத்ததுமல்லாமல், ஸிரியா (Syria)விற்குள் ஜெர்மன் சைனியங்களுக்கு இடங்கொடுத்து, தங்கள் நேச நாடான பிரிட்டனையும் காட்டிக்கொடுத்து விட்டார்கள்.

ஸிரியா (Syria)வை ஜயிப்பதற்காக பிரிடிஷ் சைனியங்கள் ஸிரியாவைத் தாக்க வில்லை. பிரிடிஷார்களும் சுதந்திர பிரெஞ்சுப் படைகளும் நிஜமான பிரான் (France)ஸை அதனுடைய விரோதிகளாகிய ஜெர்மானியரிடமிருந்தும் உள்நாட்டிலேயே இருந்து ஊரைக் காட்டிக்கொடுக்கும் தேசத்துரோகிகளிடமிருந்தும் காப்பாற்றுவதற்காகவே ஸிரியாவின் பேரில் படையெடுத்திருக்கிறார்கள்.

---

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### அலெக்ஸாண்டிரியா (Alexandria) வின் பேரில் காட்டு மிருண்டித்தனமான விமானப்படையெடுப்பு.

மிகவும் வெற்றிகரமாக அலெக்ஸாண்டிரியா (Alexandria)வை விமானங்களால் தாக்கினதாகவும், குறி தவறுமல் பிரிடிஷாரின் யுத்த தளவாடங்கள், கடற்படை தளங்கள் பேரில் தாக்கினதாகவும் பெர்லின் (Berlin) ரேடியோ ஜூன் மாதம் 9-ம் தேதி இந்துஸ்தானி, பர்ஸியன், அராபிக் பாஷைகளிலெல்லாம் ஒலிபரப்பிற்று. வாஸ்தவமாகவே இது கடுமையான தாக்குதலாயிருந்தாலும், ஒரு பிரிடிஷ் யுத்தக் கப்பல் பேரிலாவது, ராணுவ முக்கியமுள்ள இடத்திலாவது குண்டுகள் விழவேயில்லை. முக்கியமாக பொதுஜனங்களே இதனுல் கஷ்டப்பட்டவர்கள். ஐரோப்பியர்கள், அராபியர்கள் வசிக்கும் வீடுகளுக்குப் பெருத்த சேதம், பல நூற்றுக்கணக்கான பொது ஜனங்களுக்குக் காயம். பலர் மாண்டனர்.

### துணைக்காவல் படைக்கு பெரிய பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள்.

பிரிடனுக்கு கடலில் கடற்படைக்கு நஷ்டம் அதிகமாகையால் துணைக் காவலுக்கு பெரிய யுத்தக் கப்பல்களை பிரிடன் அனுப்ப வேண்டியதாயிருக்கிறது என்று ஜூன் மாதம் 13-ம் தேதி பெர்லின் ரேடியோ இந்துஸ்தானி, பர்ஸியன் பாஷைகளில் ஒலிபரப்பிற்று. இம்மாதிரி பெரிய யுத்தக் கப்பல்களை பிரிடன் துணைக்காவலுக்கு அனுப்புகிறது அதனுடைய பலத்தைக் காண்பிக்கிறதே ஒழிய, அதனுடைய பலஹீனத்தை அல்ல. ஜெர்மனிக்கு கடற்படை இல்லாததால் இங்கிலாந்து தைரியமாக பெரிய யுத்தக் கப்பல்களை வேறு வேலைகளுக்கு அனுப்ப முடியும். யுத்தத்தின்போது ஜெர்மனிக்கு இருந்த 7 பெரிய யுத்தக் கப்பல்களில் டர்பிட்ஸ் (Tirpitz) என்ற ஒரு பெரிய யுத்தக் கப்பல்தான் பாக்கியிருக்கிறது. ஒரு பாக்கட் (Pocket) யுத்தக் கப்பலும் ஜெர்மனிக்கு இருக்கிறது,

## பாலஸ்தீனமும், ஜெர்மனியின் நோக்கமும்.

பிரிடன் அராபியர்களை மிகவும் அதிகமாக துன்பப்படுத்துகிறது என்று யாரோ ஒரு அல்லாமா பாஸி (Allama Fanzi) என்கிற அராபிக்காரன் சொன்னதாக ஜூன் மாதம் 10-ம் தேதி இந்துஸ்தானியிலும், அராபிக் பாஷையிலும் பெர்லின் ரேடியோ கூறிற்று. ஜெர்மானியர் எவ்வளவு தூரம் மறுத்துக் கூறினாலும் ஜெர்மானியரின் நோக்கமும், மனோபாவமும் அராபியர்களுக்குத் தெரியாமலில்லை. நாஸிகளின் மனோபாவத்தை பாலஸ்தீன (Palestine) பத்திரிகையான "பாலஸ்தீன்" (Palestine) பின் வருமாறு எடுத்துக் காட்டுகிறது. "ரஷீத் ஆலி (Rashid Ali) ஊரை விட்டு ஓடியதிலிருந்து ஜெர்மனி ஆபத்திலிருக்கும் நண்பனுக்கு ஒத்தாசை செய்யவில்லை என்று வெட்டவெளிச்சமாகி விட்டது. ஜெர்மனியின் ஒரே நோக்கம் பல தேசங்களில் உள் நாட்டுக் கலகங்களைக் கிளப்பி விட்டு அத்தேசங்களுடைய சுதந்திரத்தை அபகரித்து" தரித்திரம், பஞ்சம், ஒற்றுமையில்லாமையாகிய இவைகளை அடிப்படையாகக்கொண்ட ஜெர்மனியின் "புதுக்கொள்கையில்" (New order) சேரும்படி செய்வதுதான்."

## உண்மையில் நடக்காத ஜெயில் கலகங்கள்.

ஜூன் மாதம் 11-ம் தேதி நாஸி ரேடியோ இந்துஸ்தானியில் பின் வருமாறு அறிவித்தது. "இந்தியாவில் பல இடங்களில் ஜெயில்களில் போலீஸாருக்கும், கைதிகளுக்கும் கலகங்கள் ஏற்பட்டதாக இந்தியாவின் பல இடங்களிலிருந்து தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அதற்காக பிரிடிஷ் சைனியத்தின் உதவியைக் கொண்டு போலீஸார் பல கைதிகளை சுட்டுக்கொன்றனர். பலரைக் காயப் படுத்தினர்."

இந்தியாவிலிருக்கும் நமக்கு இன்னும் விவரமாக விஷயங்களைச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். எந்த இடத்தில் எப்பொழுது இம்மாதிரி நடந்தது என்று நாஸி ரேடியோ அறிவிக்க முடியுமா. (ஜூன் 15-ம் தேதி வரையில் இக் கேள்விக்கு நாஸி ரேடியோ பதிலளிக்கவேயில்லை).

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் L.

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜூன் | ...28, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 29, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| | 30, திங்கட்கிழமை ... | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குரிச்சி ... | ,, | 6.30 |
| ஜூலை | ... 1, செவ்வாய்க்கிழமை. | குழிபிறை ... | ,, | 6.00 |
| | | சுந்தரம் ... | ,, | 6.30 |
| | 2, புதன்கிழமை ... | கோட்டைக்காடு ... | ,, | 6.00 |
| | | கரம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 3, வியாழக்கிழமை ... | ராமச்சந்திரபுரம் ... | ,, | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| | 4, வெள்ளிக்கிழமை ... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் LI.

| | | | | |
|---|---|---|---|---|
| | 5, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | ,, | 6.30 |
| | 6, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி ... | ,, | 6.00 |
| | | ஆவூர் ... | ,, | 6.30 |
| | 7, திங்கட்கிழமை ... | செம்மட்டிவிடுதி ... | ,, | 6.00 |
| | | மழையூர் ... | ,, | 6.30 |
| | 8, செவ்வாய்க்கிழமை. | காரையூர் ... | ,, | 6.00 |
| | | இடையாத்தூர் ... | ,, | 6.30 |
| | 9, புதன்கிழமை ... | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| | 10, வியாழக்கிழமை. | நார்த்தாமலை ... | ,, | 6.00 |
| | | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| | 11, வெள்ளிக்கிழமை... | கொன்னையூர் ... | ,, | 6.00 |
| | | வேகுபட்டி ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—28-6-41.